DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1501 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 10, 2025

# "கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே கனடாவின் பிரதமராக பதவி வகிப்பதற்கு பொறுத்தமற்ற ஒருவராவார்"

## ஒட்டாவா நகரில் தேசியப் பத்திரிகையாளர்களுக்கு பதிலளிக்கையில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு

கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே கனடாவின் பிரதமராக பதவி வகிப்பதற்கு பொறுத்தமற்ற ஒருவராவார். தற்போதைய அரசியல் நிலமையில் பல விடயங்களில் மிகுந்த கவனிப்போடு பணியாற்றி உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சனைகளுக்கு தீர்வைக் காணவேண்டிய ஒரு கட்டத்தில் எமது தேசம் உள்ளது. அவ்வாறான நிலையில் கனடாவின் அடுத்து பிரதமராக கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே தேர்ந்தெடுக்கப்பட்டால் அது நாட்டுக்கு நல்லதல்ல. எனவே தான் நான் உறுதியாக நம்புகின்றேன். எமது லிபரல் கட்சியின் தலைவராக எனக்கடுத்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள புதிய தலைவர் இந்த நாட்டின் பிரதமராக சிறந்த முறையில் பணியாற்றிக்கூடியவராக இருக்க வேண்டும். அப்போது தான் எமது கட்சி அடுத்த பொதுத் தேர்தலிலும் அரசாங்கத்தை கைப்பற்றி கனடிய தேசமும் அதன் மக்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளுக்கு தீர்வைக் கண்டு லிபரல் ஆட்சி மீண்டும் தொடரவேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

இவ்வாறு, அண்மையில் லிபரல் கட்சியின் தலைமைப் பதவியைத் துறந்த பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ ஒட்டாவா நகரில் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார். (தொடர்ச்சி 14ம் பக்கம்)





# ஸ்காபுறோவில் மீண்டும் வரலாறு படைத்த 'அனலை எக்ஸ்பிரஸ்' ஊடக நிறுவனம் நடத்திய 'பாரம்பரியம்' பல்சுவை தமிழர் விழா





கனடா - ஸ்காபுறோ நகரில் 04-01-2025 அன்று சனிக்கிழமையன்று அனலை எக்ஸ்பிரஸ்" ஊடக நிறுவனம் நடத்திய "பாரம்பரியம்" பல்சுவை தமிழர் விழா மீண்டும் வரலாறு படைத்தது என்று இங்கு புகழாரம் சூட்டினால் அது மிகையல்ல!.

"அனலை எக்ஸ்பிரஸ்" ஊடக நிறுவனத்தின் தலைவரும் நிறுவனருமான விமல் தவராஜா அவர்கள் தலைமையில் இயங்கிவரும் குழுவில் நண்பர் செல்வன் உட்பட பலர் அடங்கியுள்ளமையும் அவர்களின் தொடர்ச்சியாக பங்களிப்புக்கள் மூலம் தான் "அனலை எக்பிரஸ்" ஊடக நிறுவனம் இவ்வாறான சாதனைகளை தொடர்ச்சியாக படைக்க முடிகின்றது என்பதும் யதார்த்தமாகின்றது.
(தொடர்ச்சி 23ம் பக்கம்)

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம்.
January 21 தொடக்கம் ஒரு வார காலம் நீங்கள் கியுபாவில் தங்கியிருக்கலாம். கட்டணம் $1,300 மட்டுமே!
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851


HAPPY
THAI PONGAL
& TAMIL HERITAGE MONTH
இனிய தைப்பொங்கல் மற்றும் தமிழர் மரபுரிமை மாத வாழ்த்துக்கள்!
இனிய தைப் பொங்கல் திருநாளில் உங்கள்
குடும்பத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் நித்திய
அமைதியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும் என்ற
நம்பிக்கையோடு உங்கள் அனைவருக்கும் எனது
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்
Pongalo Pongal
பொங்கலோ பொங்கல்
RAYMOND CHO
MPP - SCARBOROUGH NORTH
4559-B Sheppard Ave E, Scarborough
416-297-5040 | raymond.choco@pc.ola.org
raymondcho.ca

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்

Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




## உதயன் கதிரோட்டம்

# மகா பாதகர்களான மகிந்த, கோட்டா, மைத்திரி, ரணில் ஆகியோருக்கு காட்டாத கடும் எதிர்ப்பை தமிழ் அரசியல்வாதிகள் அநுர குமாரவின் அரசிற்கு காட்டுவது ஏன்?

இந்தியாவின் முன்னணி இடதுசாரி கட்சிகளில் ஒன்றான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இலங்கையில் தமிழர்கள் சமத்துவம் மற்றும் கண்ணியத்துடன் வாழ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தியா முழுவதும் ஆதரவாளர்கள் நிரம்பியுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24ஆவது தமிழ்நாடு மாநில மாநாடு கடந்த வார இறுதியில் (ஜனவரி 3-5) தமிழகத்தின், விழுப்புரத்தில் நடைபெற்றது. மாநாட்டின் ஆறாவது தீர்மானமாக இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் அவல நிலை பற்றி பேசுகிறது மேலும் அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென இலங்கை அரசை கோருகிறது.

இதே இந்திய கம்யுனிஸ்ட் கட்சிதான் அநுர குமார அவர்கள் உலகமே ஆச்சரியப்படும் வகையில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வேளை, தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தது. மேற்படி வாழ்த்துச் செய்தியில் “இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஒரு இடதுசாரி வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றது ஒரு வரலாற்று நிகழ்வு“ என அந்தக் கட்சி வாழ்த்தியிருந்தது. இந்தச் செய்தி இடதுசாரிக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டிருந்த இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது என்றால் அது மிகையானது அல்ல.

இந்தியாவின் பிரதமர் மோடி அவர்கள் அநுர குமாரவை இந்தியாவிற்கு அழைத்து அரச கௌரவத்தை வழங்கி தோளில் தட்டிக் கொடுத்து பாராட்டி வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டு சிரித்த முகத்தோடு வழி அனுப்பி வைத்தார். ஜனாதிபதி அநுர குமாரவை இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் கௌரவித்தார் பிரதமர் மோடி அவர்கள். ஆனால் அவர் இடதுசாரிக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர் என்பது இந்தியப் பிர- தமர் அவர்களுக்கு இஸ்டமில்லாத ஒன்று.

ஆனால் தங்கள் நாட்டு பாராளுமன்றத்தை இடதுசாரிக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர்கள் அலங்கரிக்கின்றார்கள் என்றும் ஜனாதிபதியின் ஆசனத்தில் அவ்வாறான கருத்துக்களில் நம்பிக்கை கொண்ட ஒரு இளம் அரசியல் தலைவர் அலங்கரிக்கின்றார் என்றும் தென்னிலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் உற்சாகத்தோடு நாட்கள் நகர்ந்து செல்வதைக் கவனிக்கின்றார்கள்.

இதேவேளை, எமது தமிழர்பகுதிகளில் மூத்த அரசியல்வாதிகள் தவிர்ந்த “பின்னால்“ வந்தவர்களில் பலர் அநுர குமாரவின் தலைமையில் வடக்கிலும் கிழக்கிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சில தமிழர்களின் பிரதிநிதிகளாக காட்சியளிப்பதை விரும்பாதவர்களாக விமர்சனங்கள் அள்ளி எறிகின்றார்கள். இந்த விடயம் புதியது அல்ல. இலங்கையில் இடதுசாரிச் சிந்தனைகளை தங்கள் கைகளில் எடுத்து சில கட்சிகள் தங்கள் அரசியல் தளங்களில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இலங்கைக் கொம்யுனிஸ்ட் கட்சி (மொஸ்கோ அணி) இலங்கைக் கொம்யுனிஸ்ட் கட்சி (பீக்கிங் அணி) இலங்கை சம சமாஜக் கட்சி ஆகியவை இந்தக் கட்சிகளில் முக்கியமானவை. இந்தக் கட்சிகளுக்கு இலங்கையில் நீண்ட கால வரலாறும் அரசியல் பாதைகளும் இருந்தன. தென்னிலங்கையைப் போன்று வடக்கிலும் கிழக்கிலும் கணிசமான அங்கத்தவர்கள் இந்தக் கட்சிகளில் இணைந்து அரசியல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் மக்கள் அங்கீகாரத்தை அவர்களால் பெற்றுவிட முடியவில்லை. காரணம் தென்னிலங்கையில் முதலாளித்துவ கட்சிகளில் தொங்கிக் கொண்டிருந்தவர்களும் அவர்களின் தலைவர்களும் இடதுசாரிக் கட்சியில் வடக்கிலும் கிழக்கிலும் கால ஊன்றி விடக்கூடாது என்பதற்காக விசமத்தனமாக பிரச்சாரங்களை மேற்கொண்டார்கள்.இடதுசாரி சிந்தனைகளைப் பின்பற்றுபவர்களாக மக்கள் மாறிவிட்டால் இலங்கையில் இனவாதம் என்பது அற்றுப் போய்விடும். தமிழ் சிங்கள மக்கள் அந்த சித்தாங்களின் பின்னாள் இணைந்து ஒன்றுமையாக வாழ்ந்தால் தென்னிலங்கையில் இனவாதத்தை பாவித்து அரசியல் செய்யும் தந்திரம் வேலை செய்யாது என்பதற்காக தென்னிலங்கைக் கட்சிகளின் தலைவர்கள் தமிழ்த் தலைவர்கள் பலரை தங்கள் “கைகளுக்குள்” போட்டுக் கொண்டார்கள். இதனால் இடதுசாரிக் கருத்துக்களை வட இலங்கையில் பரப்பி அதனை மக்கள் மத்தியில் வேர் ஊன்ற வைக்க முயன்ற பல தமிழ் பேசும் இடதுசாரித் தலைவர்கள் அரசியலின் முன்வரிகைக்கு வரமுடியாமல் போய்விட்டது. இவ்வாறான பல முக்கிய தகவல்கள் இந்த இடதுசாரி அரசியலுக்குப் பின்னால் மறைந்து போயின. எவ்வுர்றஅன்றைய அமிர்தலிங்கம், செல்வநாயகம் காலத்தில் வடக்கில் இடதுசாரி அரசியல்வாதிகள் வளர்வதற்கு வாய்ப்புக்கள் இல்லாமல் போன்ற ஒரு நிலை மீண்டும் வரக் கூடாது என்பதில் இலங்கையில் இன்று மேற்படி சிந்தாத்தங்களை நேசிக்கின்றவர்கள் எண்ணுகின்றார்கள்.

அநுரகுமாரவும் அவர்களது கட்சியும் வடக்கில் மூன்று ஆசனங்களை தட்டிக் கொண்டார்கள். சரி அந்த மூவருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கிப் பார்ப்போம் என்ற ஜனநாயக பண்பை நாம் பிரயோகித்தால் தென்னிலங்கையின் தலைமையோடு இணைந்து அவர்கள் தமிழர்களுக்கு நன்மையான விடயங்கள் இடம் பெற வழிசெய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இருப்பதும் தேர்தலில் தோற்றுப் போனவர்களின் பிதற்றல்களைக் கேட்டு மீண்டும் மீண்டும் குழப்பமடையாத ஒரு நிலை எம் மண்ணில் தோன்ற வேண்டும் என்பதையே நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்!.

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதி- பாண்டியன்தாழ்வில். 2 பரப்புக் காணயில் கடையுடன் சேர்த்து கட்டப்பெற்ற 3 அறைகள் கொண்ட அழகிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **437 441 5699**
அல்லது மின்னஞ்சல் saitheva09@gmail.com

# Happy Thai Pongal & Tamil New Year

அன்பும், இன்பமும், மகிழ்ச்சியும் உங்கள்
வீட்டில் பொங்க இனிய தைப்பொங்கல் மற்றும்
தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்





VIJAY
**THANIGASALAM**
**MPP - Scarborough-Rouge Park**

**8130 Sheppard Avenue East, Unit 105,**
**Scarborough, ON M1B 3W3**
416-283-8448
vijay.thanigasalam@pc.ola.org
**vijaythanigasalam.ca**



# Happy Thai Pongal
# &
# Tamil Heritage Month

தை பொங்கல் மற்றும் தமிழ்
மரபுத் திங்கள் வாழ்த்துக்கள்



Hon.
**MARY NG, MP**
MARKHAM — THORNHILL

905-479-8100 Mary.Ng@parl.gc.ca MaryNgMP.ca

# அரிசியை உற்பத்தி செய்யும் ஆயிரம் ஏக்கர் காணியை சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்திற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News




நாடு பாரிய அரிசி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், திருகோணமலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளை, கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக பட்டினியில் இருந்து காப்பாற்றிய விவசாய நிலத்தை, சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்திற்கு கையளிக்கும் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில், விவசாயிகள் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை முத்துநகர் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட, அம்மன்குளம் விவசாய சம்மேளனம், தகரவெட்டுவான் விவசாய சம்மேளனம், முத்துநகர் விவசாய சம்மேளனம், மத்தியவெளி விவசாய சம்மேளனம் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

அப்பகுதியைச் சேர்ந்த 1,200 விவசாயிகள் கடந்த 64 வருடங்களாக பாரம்பரியமாக நெற்பயிர்ச் செய்கை மேற்கொண்டு



வரும் 1,600 ஏக்கர் காணியை சன்ரைஸ் சோலார் (Sunrise Solar) நிறுவனத்திடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆரப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

1961ஆம் ஆண்டு முதல் உள்ளூர் மக்களுக்கு விவசாயம் செய்வதற்காக அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணியை இலங்கை துறைமுக அதிகார சபையிடம் கையளிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் 1984ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாக தெரிவிக்கும் போராட்டக்காரர்கள் எனினும், அதற்கு நாடாளுமன்ற அனுமதி கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வருட அறுவடையின் பின்னர் 1,200 விவசாயிகள் 64 வருடங்களாக விவசாயத்தில் ஈடுபடும் 1,600 ஏக்கர் நெற்காணியையும், மேட்டு நில உப உணவுப் பயிர்கள் செய்கைப் பண்ணப்படும் 50 ஏக்கர் காணியையும் பிரதேச செயலகத்தின் தலையீட்டுடன் சன்ரைஸ் சோலார் நிறுவனத்திற்கு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அப்பிரதேச முஸ்லிம் தாய் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

“எங்களது இரண்டு ஏக்கர் வாழ்வாதார இடத்தை இப்பொழுது சோலார் பவர் திட்டத்திற்கு வழங்குவதற்கு, அதாவது இவ்வருட அறுவடையின் பின்னர் அந்த இடத்தில் சோலார் திட்டத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிந்துகொண்டுள்ளோம். ஆகவே நாங்கள் எங்கே செல்வது, எங்கள் குழந்தைகளுடன் எங்கே செல்வது? எல்லோருமே இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் உள்ள விவசாயிகள். ஏழை விவசாயிகள் நாங்கள். மரவள்ளியும், சோறும்தான் எங்கள் வாழ்வாதாரம். கால்நடைகளுடன் மாத்திரமல்ல யானைகளுடனும் போராடி நாங்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றோம். எங்கள் விளைநிலங்களை பெற்றுத்தர வேண்டும். துறைமுக அதிகார சபையின் இடையூறுகள் இன்றி எங்கள் நிலங்களை எங்களுக்கே வழங்க வேண்டும்.

“விவசாயத்தை அழிப்பது அபிவிருத்தியா?”, “விவசாய நிலங்களை அபகரிக்க வேண்டாம்“, “சோலார் பவர் சாப்பிடவா?”, போன்ற பதாகைகளை ஏந்தியவாறு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த காணிகளில் வருடாந்தம் 1,12,000 புசல் நெல் விளைவதாக சுட்டிக்காட்டிய விவசாயிகள், சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டத்திற்கு விவசாய நிலத்தை வழங்கினால், அது ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு மிகப்பெரிய அடியாக விழும் எனவும், விவசாயத்திற்கு நீரை வழங்கிய ஐந்து சிறு குளங்களும் அழிவடையும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது வாழ்வாதாரமாக விளங்கும் விவசாய நிலங்களை சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்திற்கு ஒப்படைப்பதை உடனடியாக நிறுத்தி, அப்பகுதி மக்களின் வாழ்க்கையை காப்பாற்ற வேண்டுமெனக் கோரும் மகஜர் பிரதேச செயலாளர் என். மதிவண்ணனிடம் ஆர்ப்பாட்டக்காரர்களால் ஒப்படைக்கப்பட்டது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகன் குகதாசன், திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன ஆகியோரிடமும் மகஜரின் பிரதிகளை போராட்டக்காரர்கள் கையளித்திருந்தனர்.

விவசாய காணியில் திட்டமிடப்பட்ட சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்தை நிறுத்தி, விவசாயிகள் தங்களது விவசாயப் பணிகளை தடையின்றி தொடர்வதற்கு அனுமதிப்பது என, 2024 டிசம்பர் 24ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக போராட்டத்தை முன்னெடுத்த விவசாயிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரொ'ான் அக்மீமன தெரிவித்துள்ளார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் திருவெம்பாவைப் பாராயணம் இசைத்தல் நிகழ்வு!

பு. கஜிந்தன்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் 5 ஆவது வருடமான 4ம் திகதி சனிக்கிழமை அன்றையதினமும் திருவெம்பாவைப் பாராயணம் இசைக்கப்பட்டது.

பரமேஸ்வரா ஆலயத்திலிருந்து ஆரம்பித்து கலட்டிச்சந்தி ஊடாக யாழ்பல்கலைக்கழக பாலசிங்கம் விடுதியினைக் கடந்து தபாற்பெட்டிச் சந்தி ஊடாக பரமேஸ்வராச்சந்தி வழியாக மீண்டும் யாழ்பல்கலைக்கழகத்தை திருவுலா வந்தடைந்தது.



மேற்படி பாராயணத்தில் யாழ் இந்து மன்ற பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான திரு. சி.ரமணராஜா, கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான திரு. சு.கபிலன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ஒவ்வொருநாளும் திருவெம்பாவை பாராயணம் இடம்பெற்று இறுதி நாள் யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரா முன்றலில் இருந்து மாணிக்கவாசகர் எழுந்தருளி யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம், திருநெல்வேலி சந்தி, பரமேஸ்வரா சந்தி ஊடாக மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தினை வந்தடையும்.

மேலும் திருவெம்பாவை விரத நாளினை முன்னிட்டு கடந்த 2022 ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கபட்ட மார்கழி விழாவும் சிறப்புற இடம்பெறவுள்ளது.

# தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக கடந்த காலங்களில் மக்களுக்கான சேவைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்கிறார் பிரதி அமைச்சர் பிரதீப்!



கடந்த காலங்களில் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மக்களுக்கு உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை என பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சாந்தலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அலுவலகத்தில் பணிபுரிகின்ற உத்தியோகஸ்த்தர்கள், நிர்வாகத்தினருக்கு புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்து அதிகாரிகள் முன் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார் இதன் போது மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சி என்பது மலையக பெருந்தோட்ட பகுதிகளுக்கு பாரிய சேவையினை செய்ய கூடிய ஒரு அமைச்சாகும் எமது சமுகத்திற்கு சென்றடைய வேண்டிய சேவைகள் சென்றடைந்ததா என்பது குறித்து சற்று யோசிக்க வேண்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு அதிகூடிய பெருபான்மையை மக்கள் வழங்கியிருக்கிறார்கள் மக்களுக்கு சேவை செய்யும் அரச உத்தியோகத்தர்கலாகிய நாம் மீது மக்களுக்கு நல்ல அபிபிராயம் கிடையாது சாதாரண விடயத்தை பொதுமக்கள் நிறைவேற்றிக்கொள்ள பணிமனைகளுக்கு செல்லும் பட்ஷத்தில் அவர்கள் அலைக்கடிப்பது நமது நாட்டில் ஒரு வழமையான செயலாக இருக்கிறது.

இதேவேளை அரச நிறுவனங்களில் கையூட்டல் பெரும் சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம் பெருகிறது எனவே தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில் கிலின் ஶ்ரீலங்கா என்ற வேளைத்திட்டத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து பல்வேறு வேளைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம் இந்த திட்டத்தின் ஊடாக சிந்தனை ரீதியிலான மாற்றங்களை நாம் கொண்டு வர வேண்டும் இதுவரை காலமும் நாம் பழைய செயற்பாடுகளுக்கு உள்வாங்கப்பட்டுயிருந்தோம் அந்த பழைய முறையினை நாம் மாற்றவேண்டும் நம்மை தேடிவரும் மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவது எமது முக்கிய கடப்பாடாகும் இந்த 2025ம் ஆண்டில் இருந்து மக்களுக்கான சேவை தொடரும் என்றார்.

இதேவேளை இதன் போது 2025ம் ஆண்டுக்கான விஷேட வேலைத்திட்டங்கள், அரச உத்தியோகஸ்தர்களின் பணிகள் குறித்து சுட்டி காட்டியுதடன் தொடர்ந்து அமைச்சர்கள் இருவரும் உத்தியோஙஸ்தர்களுடன் சிநேக பூர்வமாக உரையாடினார்கள்.

அதனை தொடர்ந்து பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை, சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்தம் மன்றம், பனை அபிவிருத்தி சபை ,அமைச்சின் அலுவலகத்தில் இயங்கும்.

நிர்வாகம் பிரிவு, அபிவிருத்தி பிரிவு, திட்டமிடல் பிரிவு கணக்காய்வு பிரிவு செயற்றிட்டங்கள், பொறியியல் பிரிவு, போன்ற பிரிவுகள் உள்ளிட்ட வெள்ளவத்தையில் அமைந்துள்ள அமைச்சின் “கற்பகம்” பனை உற்பத்தி பொருட்கள் விற்பனை நிலையம் உட்பட மேலும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களை நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் கண்காணிப்பும் செய்யப்பட்டது.

இதன்போது பிரதி அமைச்சரின் பிரத்தியோக செயலாளர் கலாநிதி சிவப்பிரகாசம் அவர்களும் இணைப்புச் செயலாளர் திரு. சிவனேசன் உள்ளிட்ட அமைச்சுகளில் முக்கியஸ்தர்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் பலர் இதன் போது கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நோயாளிகளை ஏற்றிச் சென்ற முழங்காவில் வைத்தியசாலையின் ஆம்புலன்ஸ் விபத்து!

5ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் இருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இரண்டு நோயாளிகளை ஏற்றிச் சென்ற முழங்காவில் வைத்தியசாலைக்கு சொந்தமான ஆம்புலன்ஸ் விபத்துகுள்ளாகியுள்ளது.

பூநகரிக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட பகுதியில், நெல் மூட்டைகளை ஏற்றிச் சென்ற உழவு இயந்தின் மீது மோதி ஆம்புலன்ஸ் விபத்துக்குள்ளாகியது. இந்நிலையில் ஆம்புலன்ஸின் முன் பக்கம் மிகவும் சேதமடைந்துள்ளது.

அந்த ஆம்புலன்ஸ் தொடர்ந்தும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டதால் நோயாளிகளை ஏற்றிச் செல்வதற்கு கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது.







# இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நபரின் உடலம் நீதிபதியின் முன்னிலையில் தோண்டப்பட்டது!

மன்னார் நீதிமன்றத்தில் விபத்து தொடர்பான வழக்கில் உள்ள நபரான ஜேசுதாசன் ரஞ்சித்குமார் (வயது 42) என்பவர் கடந்த 2022.06.13 அன்று உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் - கல்லூண்டாயில் உள்ள சேமக்காலையில் அவரது உடலம் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று அவரது சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மன்னார் - இலுப்பை கடவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அதன்பின்னர் நவாலி பகுதியில் வசித்து வந்துள்ளார். இந்த விபத்து சம்பவம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்திலும் வழக்கு உள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்ததாக வைத்தியர் ஒருவர் தெரிவித்த நிலையில் கிராம சேவகரும் அதற்கு இணங்க பூர்வாங்க செயற்பாடுகளை மேற்கொண்டார். இந்நிலையில் கல்லூண்டாய் சென். பீற்றர் தேவாலய சேமக்காலையில் அவரது சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இது இவ்வாறு இருக்கையில் குறித்த நபர் மீதான விபத்து மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபர் அங்கு பிரசன்னமாகவில்லை. குறித்த நபர் உயிரிழந்து, அவரது சடலம் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்ட விடயம் அதன்பின்னரே நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அந்தவகையில் சடலத்தை புதைத்த பகுதி மல்லாகம் நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் உள்ளமையால் இது குறித்து மல்லாகம் நீதிமன்றத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

அந்தவகையில் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக அவரது சடலத்தை தோண்டுமாறு மல்லாகம் நீதிமன்றம் விசேட உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், இன்றையதினம் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சட்ட வைத்திய அதிகாரி, தடயவியல் பொலிஸார், பிரதேச சபையினர், மன்னார் பொலிஸார், மானிப்பாய் பொலிஸார், கிராம அலுவலர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஆகியோரின் பிரசன்னத்துடன் சடலம் அகழ்ந்து எடுக்கப்பட்டது.

இவ்வாறு அகழ்ந்து எடுக்கப்பட்ட சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# இளங்குமரன் எம்.பி சட்டத்தை கையில் எடுக்க முடியாது – யாழ். தொழிலதிபர் பரபரப்பு குற்றச்சாட்டு!

தமது வர்த்தக நிறுவனம் சட்ட ரீதியாகவே சுண்ணக்கல் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உண்மையான விடயங்கள் தெரியாமல் தமது வர்த்தக நிறுவனத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியதாகவும் சிற்றி வன்பொருள் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தான் ஒன்றை முறைப்பாடு பதிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

4ம் திகதி அன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் 65 வருட காலமாக கட்டடப் பொருள் வியாபாரத்தை நாம் செய்து வருகிறோம். இவ்வாறான நிலையில் எமது நிறுவனத்திற்கு சொந்தமான வாகனம் சுண்ணக் கற்களை திருகோணமலைக்கு கொண்டு செல்லும் வழியில் சாவகச்சேரியில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வீதியின் குறுக்காக தனது வாகனத்தை நிறுத்தி மறித்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்தும் வகையில் தனது வாகனத்தை எமது வாகனத்துக்கு முன்னால், பிரதான வீதியில் நிறுத்தி சாரதியை மிரட்டி வாகன திறப்பை வாங்கியமை சட்டத்துக்கு விரோதமான செயற்பாடு.

1992 ஆம் ஆண்டு 33 இலக்க சட்டத்தின் 28 (1)(2) பிரிவுகளின் பிரகாரம் எமது வாகனம் சுண்ணக் கற்களை எடுத்துச் சென்றது. முதலாவது பிரிவானது கனியவளங்களை அகழ்வதற்கான அனுமதி, எடுத்துச் செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் என்பவற்றை பற்றி கூறுகிறது. அதன் பிரகாரம் கல் ஆலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

கல் உடைக்கும் ஆலைகள் தமது வியாபார நிலையத்தை பதிவு செய்துள்ளார்கள். மத்திய சுற்றடல் அதிகாரசபையின் அனுமதி பெற்றுள்ளார்கள் அதுமட்டுமல்லாது கனியவளத் திணைக்களத்தில் அனுமதி பெற்றுள்ளார்கள்.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கொழும்பிலிருந்து ஜி.பி.எஸ் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு சகல அனுமதிகளும் பெற்றவர்களிடமிருந்து நாம் கல்லை மட்டும் வாங்குகிறோம். நாம் கிடங்கு கிண்டுவதோ அல்லது கல்லை உடைப்பவர்களோ அல்ல.

முறைப்படி அனுமதி பெற்றவர்களிடமிருந்து பணம் கொடுத்து அவர்களின் கல்லை வாங்கி திருகோணமலைக்கு கொண்டு செல்கிறோம். அதில் நாமும் சிறிய இலாபம் அடைவதோடு கல்லுடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் கல் ஆலைகளை நம்பி தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரத்தையும் நாம் பாதுகாத்து வருகிறோம்.

இலங்கைச் சட்டத்துக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் அன்றிலிருந்து இன்றுவரை இடம்பெற்று வரும் நிலையில் இதை அறியாத சிலரின் தூண்டுதலின் பேரில் எமது நிறுவனத்தையும் எமது வியாபாரத்தையும் அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் இளங்குமரன் எம்.பி செயல்பட்டிருக்கிறார்.

பிரிவு இரண்டின் பிரகாரம் அரை கனியங்களை எடுத்து செல்வதற்கான அனுமதி தேவையில்லை. இதை அறியாத இளங்குமரன் எம்.பி எமது வாகனத்தை மறித்து கற்களுக்கு மேல் போடப்பட்டிருந்த பாதுகாப்பு உறையினை கிழித்து சட்டத்தை தன் கையில் எடுத்துள்ளார்.

ஏற்கனவே வவுனியா பொலிசார் எமது வாகனத்தை மறித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில், நீதிமன்றமானது சட்டத்துக்கு உட்பட்டு வர்த்தக நடவடிக்கை இடம்பெறுவதாக தெரிவித்து எமது வாகனத்தை விடுவித்தது.

அது மட்டுமல்லாது கெப்பெற்றிக்கொல்லாவை நீதிமன்றமும் சட்டத்துக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் இடம் பெறுவதாக தீர்ப்பு வழங்கியது.

வவுனியா நீதிமன்றம் மற்றும் கெப்பற்றிக்கொல்லாவ நீதிமன்றத்தில் பொலிசார் தாக்கல் செய்த வழக்கில், சட்டத்துக்கு உட்பட்டு சுண்ணக்கல் எடுத்துச் செல்லப்படுவதாக கௌரவ நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டி சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு மாகாணங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எவ்வாறு கருங்கல்லு சல்லி மற்றும் தூள் எடுத்து வரப்படுகிறதோ அதே நடைமுறை சுண்ணக்கல்லுக்கு இருக்கிறது.

அரசாங்கம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறுகின்ற நிலையில், விவசாயம் மேற்கொள்வதற்காக இரண்டு அடி ஆழம்வரை கல்லு தோண்டப்பட முடியும்.

ஆனால் இளங்குமரன் எம்.பி தென்மராட்சியில் உள்ள பழைய கிடங்கு ஒன்றினை காட்டி, நாம் புன்னாலைக் கட்டுவேன் பகுதியில் இருந்து எடுத்துச் சென்ற சுண்ணக் கல்லுக்கு விளக்கம் கொடுக்கிறார். யாரோ 4 பேர் வழங்கிய தகவலை பொதுமக்கள் வழங்கிய தகவலாக தெரிவித்து ஊடகங்களில் தவறான செய்தியை வழங்கியுள்ளார்.

எமது நிறுவனத்தை நம்பி 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதேபோல் கல் உடைக்கும் ஆலைகளை நம்பி பரம்பரை பரம்பரையாக கல்லுடைக்கும் தொழிலை மேற்கொள்ளும் 300க்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரத்துக்கு எம்.பி பதில் கூறுவாரா?

அவரின் செயற்பாடு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் வழங்கிய ஊடக செய்திகள் தொடர்பில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள கணணி குற்றப்பிரிவுக்கு முறைப்பாடு வழங்க உள்ளேன்.

சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில் அதனை தடுத்து தென் இலங்கையைச் சேர்ந்தவர்களை அழைத்துவந்து அவர்களுக்கு தொழில் கொடுக்கும் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் எழுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் கடற்தொழில் அமைச்சரை சந்திப்பதற்கு சென்றேன். அவர் அங்கு இல்லை எனது ஆதாரங்களை அவரது அலுவலகத்துக்கு சமர்ப்பித்தேன். அதனை ஆராய்ந்த அவரது அலுவலக உத்தியோத்தர் அமைச்சரிடம் குறித்த விடயம் தொடர்பில் கூறினார். அதன்பின்னர் என்னிடம் பேசினார்.

நீங்கள் சட்டத்துக்கு உட்பட்டு செய்வதை செய்யுங்கள் எனக் கூறினார். இது எனக்கு ஆறுதல் அளித்தது. ஆகவே மாற்றத்தை விரும்பிய மக்களுக்கு ஏமாற்றத்தை வழங்குவது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. எனவே தொழில் வழங்குனர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்காமல் செயல்படுமாறு பாராளுமன்ற உறுப்பினரை கேட்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.


YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4



# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எலிக்காய்ச்சலால் மேலும் இரண்டு மரணங்கள் பதிவு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

எலிக்காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 2ம் திகதி வியாழக்கிழமை அன்று இரண்டு மரணங்கள் சம்பவித்துள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலே எலிக்காய்ச்சல் நோய் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் என 202 நோயாளர்களின் தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெற்றது. இவற்றிலே 94 பேருக்கு இந்த எலிக்காய்ச்சல இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 10 நோயாளர்கள் எலிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இவர்களில் ஏழு பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும், மூன்று பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த 24 மணி நேரத்தில் மூன்று பேர் எலிக்கய்ச்சல் நோய் என்ற சந்தேகத்துடன் புதிதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி 2ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரண்டு இறப்புகள் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக ஏற்பட்டுள்ளது. இதில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்தவர். மற்றவர் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்தவர். அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் எலி காய்ச்சல் காரணமாக இதுவரை எட்டு இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி 2-ம் திகதி ஏற்பட்ட இறப்பில், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள துன்னாலை கிராமத்தை சேர்ந்த 23 வயதுடைய ஆண் ஒருவர் ஆவார். இவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் இவர் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லவில்லை. மருந்தகங்களிலும், தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுள்ளார்.

பின்னர் நோய் முற்றிய நிலையில் ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அத்துடன் நாங்கள் அவரது பகுதியில் வழங்கிய தடுப்பு மருந்தை இவர் துரதி'டவசமாக பெற்றுக் கொள்ளவில்லை. விவசாயிகள், கடல் நீரில் மீன் பிடிக்க செல்பவர்கள் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அந்த தடுப்பு மருந்தை, உங்களது சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கு சென்று அந்த தடுப்பு மருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

பெரும்பாலான இறப்புக்கள் தாமதமாக சிகிச்சைக்கு வந்த காரணத்தினாலேயே சம்பவித்துள்ளது. பின்னர் நாங்கள் ஏற்படுத்திய விழிப்புணர்வுக்கு அமைவாக மக்கள் காய்ச்சல் ஏற்பட்டபோது உடனடியாக சிகிச்சையை பெற்றுக் கொண்ட நிலையில் அவர்களது உயிரை காப்பாற்றகூடியவாறு இருந்தது.

இந்த காலப்பகுதியில் டெங்கு நோய் மற்றும் எலி காய்ச்சலின் தாக்கம் காணப்படுகின்றது. எனவே ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் தாமதிக்காமல் அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்கு செல்லுங்கள்.

மேலும் எலி காய்ச்சலானது கால்நடைகளில் இருந்து பரவுகின்றதா என்பது தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்றன. அநேகமாக அதன் பெறுபேறுகள் அடுத்த வாரத்தில் வெளிவரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மனு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளை விடுவிக்க வலியுறுத்தி ஜனாதிபதியிடம் கையளிக்கும் நோக்கில் மனுவில் கையெழுத்துப் பெரும் பிரச்சாரம் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைமையில் 2024ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து சேகரிப்புப் பிரச்சாரம், டிசம்பர் 30ஆம் திகதி மன்னாரிலும், 2025ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி முல்லைத்தீவிலும், 2025 ஜனவரி 3ஆம் திகதி கிளிநொச்சியிலும் முன்னெடுக்கப்பட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுபான்மையினருக்கு எதிரானது என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தற்போதைய அரசாங்கம் இல்லாதொழிக்க வேண்டுமென போராளிகளின் நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்னர் நட்புறவுடன் பயணிப்போம் எனக் குறிப்பிட்டாலும், ஆட்சிக்கு வந்த பின்னர் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை மறந்துவிடுவதாக, ஜனவரி 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து பிரச்சாரத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் குற்றம் சுமத்தினார்.



“போர் முடிந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் ஒவ்வொரு அரசும் தன்னுடைய அரசாங்கத்தை அமைக்கின்றபோது, நல்லிணக்கம் என்கிறார்கள், மாற்றம் என்கிறார்கள் புதியச சிந்தனைகளோடு பயணிப்போம் என்கிறார்கள். ஒவ்வொரு தேர்தலின்போது ஒவ்வொருவரும் நல்லிணக்கத்துடன் பயணிப்போம் என சினேகபூர்வ அழைப்புக்களை விடுக்கின்றார்கள். ஆனால் 20, 25 வருடங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளாக இருக்கின்ற அந்த அரசியல் கைதிகளின் விடுதலையை ஆட்சிக்கு வந்தவுடன் மறந்துவிடுகின்றார்கள்.”




குறைந்த பட்சம் தற்போதைய அரசாங்கமாவது அரசியல் கைதிகளை விடுதலை செய்து நல்லிணக்கத்தை நடைமுறை சாத்தியப்பத்த வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

“இப்பொழுது வந்துள்ள மாற்றம் மாற்றம் என பேசிக்கொண்டு செயற்படும் அரசு இவர்கள் தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும். எத்தனையோ குழந்தைகள் தமது தாய், தந்தையரை பார்க்க முடியாமல் இருக்கின்றார்கள். நீண்டகாலமாக சிறையில் வாடும் அவர்களை விடுதலை செய்தவன் ஊடாக உங்கள் நல்லிணக்கத்தையும் மாற்றத்தையும் வெளிப்படுத்தி எதிர்காலத்தில் இந்த தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு வழி சமைக்க வேண்டும்.”

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் கடந்த அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பொது மக்கள் கையெழுத்துப் போராட்டத்தில் ஆர்வத்துடன் பங்களிப்பை வழங்கிய ஜனாதிபதி உட்பட தேசிய மக்கள் சக்தி தலைமைத்துவம், சட்டத்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் ஒப்படைப்பதாக எதிர்ப்பார்ப்பதாக நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும் என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்!



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும். இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் சந்திரசேகர் காட்டமாக தெரிவித்துள்ளார்.

யாழ்.தென்மராட்சியில் சட்ட விரோதமான முறையில் சுண்ணக்கல் அகழப்படுவதாக கூறப்படும் இடங்களை அமைச்சர் சந்திரசேகர் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் சரசாலை வடக்கு மற்றும் மந்துவில் பகுதிகளில் சுண்ணக்கல் அகழப்பட்டுவரும் இடங்களுக்கு நேரில் சென்று ஆராய்ந்தார்.



அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன் மற்றும் அதிகாரிகள் சிலரும் உடன் சென்றிருந்தனர்.

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற வியக்க வைத்த கஜமுக சூரசம்காரம்!



யாழ்ப்பாணம் - மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானத்தில் கஜமுக சூரசம்கார உற்சவம் 04.01.2025) மாலை வெகு சிறப்பாக நடைபெற்றது.

விநாயகர் விரதத்தின் 20ம் நாளான பி.ப 3.30 மணிக்கு அபிஷேகத்துடன் கிரியைகள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து விசேட ஹோமப் பூசைகள், வசந்த மண்டப பூஜைகள் நடைபெற்றதுடன் மாலை கஜமுகசங்காரம் நடைபெற்றது.



இதன்போது பாரம்பரிய மானாட்டம், குதிரையாட்டம், மயிலாட்டம், சிலம்பம், பொய்க்கால் நடனம், மற்றும் கரகம் என்பன நடைபெற்றன.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த சூரசங்காரத்தை கண்டுகளித்ததுடன், விநாயகப் பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், தங்கள் கடமைகளை சரியாகச் செய்யாததால் இங்கு சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுகின்றன

## யாழ்ப்பாணத்தில் திருட்டு தொழிலா? ஒழித்தே தீருவோம் என அமைச்சர் சந்திரசேகரன் சூளுரை!



சுண்ணக்கல் ஏற்றி வந்த பார ஊர்தி விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் செயல்பட்டது பரவாயில்லை அல்லது நல்லது. கல் அகழ்வு விடயத்தில் அதிகாரிகளின் அசமந்த போக்கு காணப்படுவதாக கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

05-01-2025 அன்று யாழ்ப்பாணம் சரசாலை பகுதியில் கல் அகழ்ந்த பகுதிகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு லொறியில் சுண்ணக்கல் ஏற்றி சென்றபோது, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வழிமறித்து அந்த லொறியை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார். இந்த விடயமானது கடந்த சில தினங்களாக ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டது. இந்நிலையில் நீங்கள் செய்தது தவறு, குற்றச்செயல்கள் இடம்பெறும்போது அவற்றினை பொலிஸாருக்கு தெரியப்படுத்தி, அவர்கள் மூலமாக வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் இளங்குமரனுக்கு அறிவுறுத்தினேன்.

ஆனால் தற்போது பார்க்கும் பொழுது இளங்குமரன் செய்தது பரவாயில்லை அல்லது நல்லது என்று தோன்றுகிறது. இளங்குமரனின் இந்த வேலையால் அனைவரும் கலக்கமடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. வெட்ட வெட்ட பூதம் கிளம்பியது போல இன்று பல பிரச்சினைகள் வெளிவருகின்றன.

சரசாலை பகுதியில் சட்டரீதியான வேலைகள், சட்ட ரீதியற்ற வேலைகள் இடம்பெறுகின்றன. தனியார் காணிகளில் அகழ்வுகள் இடம்பெறுகின்றன, அதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு அருகாமையில் அரச காணிகள் உள்ளன அதில் அனுமதி பெறப்படாமல் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும் வேளையில் சட்ட விரோதமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றது என்பதை ஊகித்துக் கொள்ள முடிகின்றது.

இந்த விடயத்தில் பொறுப்பு கூற வேண்டியவர்கள் இந்த தொழிலை புரிகின்ற வியாபாரிகளோ, தொழில்புரிகின்ற ஊழியர்களோ அல்ல. மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலர், கிராம செயலர், புவிசரிதவியல் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரே இதற்கு பொறுப்பு கூற வேண்டும். அரசு அதிகாரிகள் சரியாக செயல்படவில்லை என்று குற்றச்சாட்டை முன்வைக்கிறேன். அத்துடன் இது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும் விளைகிறேன்.

சரசாலையில் உள்ள சுண்ணக்கல்லுக்கும் இளங்குமரன் எம்.பி மறித்த லொறியில் இருந்த சுண்ணக்கல்லுக்கும் இடையே வித்தியாசம் இருக்கின்றது. அப்படியாயின் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் இந்த திருட்டுத் தொழில் இடம்பெறுகின்றதா என்று கேள்வி எழுகின்றது.

ஒரு சிலர் வந்து, இவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பதால் தொழில் இல்லாமல் போகின்றது, வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது, மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். ஆனால் இவ்வாறான அகழ்வுகள் மூலமாக ஏற்படுகின்ற அனர்த்தங்களுக்கு பல பரம்பரைகள் பலியாகும் என்ற விடயத்தை நாங்கள் மறந்து விடக்கூடாது.

ஒரு சில வியாபாரிகளின் பணப் பசியை போக்கும் தேவைக்காக இந்த செயற்பாடுகள் இடம்பெறுமாக இருந்தால் எமது அரசாங்கத்தில் இது தடுத்து நிறுத்தப்படும்.

# மட்டக்களப்பில் களுவாஞ்சிகுடியில் அடகுவைத்த நகைகளை மீட்கச் சென்றவரை தாக்க முயன்ற தனியார் நிதி நிறுவன உத்தியோகத்தர்

- நமது நிருபர்

மட்டக்களப்பில் தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் தாம் அடகுவைத்த தங்க ஆபரணங்களை மீட்பதற்காக அங்கு சென்ற நபரை நோக்கி அந்நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் தகாத வார்த்தைகளை பிரயோகித்து அவரை தாக்குவதற்கு முற்பட்டதாக பாதிக்கப்பட்டவர் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது, குறித்த பிரதேசத்திலுள்ள நபர் ஒருபர் தனது பணத்தேவைக்காக தேவைகளுக்காக களுவாஞ்சிக்குடி பகுதியில் அமைந்துள்ள தனியார் நிதி நிறுவனத்தில் 19 இலட்சம் ரூபாவுக்கு தங்க ஆபரணங்களை அடகு வைத்திருந்தார்.

இதனையடுத்து குறித்த நிதி நிறுவனத்தில் அடகுவைத்த தனது நகைகளை மீட்பதற்காக கடந்த 3ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் பணத்துடன் அந்நிறுவன த்துக்குச் சென்று செலுத்தவேண்டிய முதல் அதற்கான வட்டி தொடர்பில் கணக்குப் பார்த்தபோது, செலுத்தவேண்டிய மொத்தத் தொகை 20 இலட்சம் ரூபா என நிறுவனத்தினர் கூறியுள்ளனர்.

அதனை தொடர்ந்து அந்த நபர், தான் 20 இலட்சம் ரூபா பணம் கொண்டு வந்துள்ளதாகவும் உடன் அதனை செலுத்துவதாகவும் நகைகளை தருமாறு கேட்டதையடுத்து அங்கு கடமையாற்றியவர் ஏன் அவசரமாக மீட்கப் போகின்றீர்கள் இன்னும் இரு நாட்களுக்கு இருக்கட்டும் திங்கட்கிழமை தருகின்றோம்" இப்போது உங்களது நகைகளை தரமுடியாது என கூறியுள்ளார்.

அதற்கு நகை அடகுவைத்த நபர், தனக்கு அவசரமாக நகைகள் தேவை என கூறி நகைகளை கேட்டுள்ளார் அதற்கு நிறுவனத்தினர் நகைகளை கொடுக்க மறுத்துள்ளதையடுத்து அந்த நபர் வீட்டுக்குத் திரும்பிய பின்னர் சுமார் ஒரு மணிநேரத்துக்கு பின்னர் மீண்டும் சென்று அடகுவைத்த ஆபரணங்களை கேட்டுள்ளார்.

அப்போது அங்கு கடமை புரியும் உத்தியோகத்தர் ஒருவர் நகைகளை பெறச் சென்ற நபரை தகாத வார்த்தைகளால் திட்டியதுடன் அவரை தாக்கவும் முற்பட்டுள்ள தையடுத்து பாதிக்கப்பட்ட நபர் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று தனக்கு குறித்த நிதி நிறுவனத்தால் நடந்த அநீதி தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த நிதி நிறுவனத்தில் கடமையாற்றும் குறித்த உத்தியோகத்தர்கள் தன்னிடம் மாத்திரமின்றி, இன்னும் பலரிடம் இதேபோன்று அத்துமீறி நடந்து கொண்டதாகவும் வாடிக்கையாளர்களின் தங்க நகைகளை இன்னும் சில நாட்கள் நிறுவனத்தில் வைத்திருந்தால் செலுத்தவேண்டிய வட்டிப் பணத்தொகை அதிகரிக்கும் என்ற நோக்கத்திலேயே நிறுவனத்தினர் நகைகளை திருப்பிக் கொடுக்க தாமதிப்பதாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

இதேவேளை வாழைச்சேனை, கிரான், போன்ற பிரதேசங்களிலுள்ள சில நிதி நிறுவனங்களில் தமது பண தேவைக்காக அடைவு வைத்த தங்க நகைகளை மீட்பதற்கு சென்றால் உடனடியாக அடைவுகளை வழங்காது இழுத்தடித்து வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.



# அராலி வீதியில் உள்ள மதகில் பாரிய குழி

## கொங்கிரீட் தட்டில் கம்பிகள் இல்லாததால் மக்கள் அதிர்ச்சி!

அராலி பாலத்தில் இருந்து அராலி துறைக்கு செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று பாரிய சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான வீதியாக காணப்படுகிறது. அத்துடன் 789 வழித்தட பேருந்து பயணிக்கும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகிறது.

இந்த வீதியில் உள்ள மதகில் சுமார் இரண்டு அடி நீளமும் ஒன்றரை அடி அகலத்திலும் துவாரம் காணப்படுகின்றது. கொக்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது. இருப்பினும் கொங்கிரீட் தகட்டுக்கு உள்ளே கம்பிகள் காணப்படவில்லை என்ற விடயமானது முன்னர் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு பணிகளின் தரமற்ற தன்மையை எடுத்துக்காட்டுவதுடன் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த வீதியால் அன்றாடம் 789 வழித்தட பயணிகள் சேவை பேருந்து பயணிப்பதுடன், வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், வேலைகளுக்கு செல்வோர் என பல்லாயிரக்கணக்கானோர் இந்த வீதியை பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் எதிரே வருகின்ற ஒரு வாகனத்துக்கு இன்னொரு வாகனம் வழிவிட்டு கொடுத்து பயணிப்பதற்கு ஏற்ற அளவில் இந்த வீதி காணப்படவில்லை. அகலத்தில் குறைந்ததாக உள்ளதுடன் இவ்வாறு குழியும் உள்ளதால் இந்த வீதியால் பயணிக்கும்போது உயிர் ஆபத்தான பயணங்களையே எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.





பரந்தன் - முல்லைத்தீவு வீதியில், புளியம்பொக்கணைக்கு அருகே உள்ள பாலத்தின் புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டதால், அண்மையில் அந்த பாலத்தில் விழுந்து இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர். சேதமடைந்த இந்த மதகுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காத ஒவ்வொரு நிமிடமும் ஆபத்தான பயணத்தை மேற்கொள்ளும் சூழ்நிலையே காணப்படுகிறது.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்.

# கிளிநொச்சி பொலிசாரால் நீண்ட காலமாக தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டார்

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சந்தேகநபர் 2022.08.30 அன்று கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் வீடு ஒன்றினை அடித்து உடைத்து, தீயிட்டு எரித்து விட்டு தலைமறைவாகி இருந்துள்ளார். இந்நிலையில் குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்கு கிளிநொச்சி பொலிஸார் வலைவீசி வந்தனர்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் - 5ஆம் குறுக்குத்தெரு பகுதியில் தலைமறைவாகி இருந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தை நபர் மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இன்னும் சில நாட்களில் பதவி விலகுவாரா?

## கனடிய அரசியல் தளத்தில் எதிர்பார்க்கப்படும் முக்கிய நிகழ்வு எப்போது?

**- ரொறன்ரோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்**



கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இன்னும் சில நாட்களில் பதவி விலகுவாரா என்ற கேள்வியும் ஆச்சரியமும் நிறைந்த நாட்களாக இனிவரும் மூன்று அல்லது நான்கு நாட்கள் அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் அத்துடன் கனடிய அரசியல் தளத்தில் எதிர்பார்க்கப்படும் முக்கிய நிகழ்வாகவும் கருதப்படுகின்ற பிரதமரின் பதவி விலகல் பெரும்பாலான கனடியர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க கடந்த சில மாதங்களாக கனடாவின் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மாத்திரமல்ல. பிரதமர் பதவியிலிருந்தும் விலகிக் கொள்ள வேண்டும் என்றும் பலத்த குரல் எழுப்பி வந்துள்ளதும் பிரதமரது பதவி விலகலுக்கு முக்கிய காரணியாக விளங்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதற்கிடையில் எதிர்வரும் 8ம் திகதி புதன்கிழமை ஒட்டாவா மாநகரில் ஆளும் லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள கூட்டம் நடைபெறவுள்ளதெனவும். எனவே அன்றைய தினம் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் தனது பதவி விலகலை அறிவிப்பாரா அல்லது அதற்கு முன்னர் வரும் நாட்களில் அறிவிப்பாரா அல்லது எதிர்வரும் தேர்தல்வரை தான் பிரதமராக இருந்து அரசாங்கத்தை தலைமை தாங்கிச் செலவாரா என்பதை நிச்சயமாகத் தெரிவிக்க இலலாமல் உள்ளதாக. கட்சியின் முக்கிய உறுப்பினர்களின் தனிப்பட்ட பதிவுகளிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

மேலும் இச் செய்தி எழுதப்பட்டுக்கொண்டிரக்கும் 5ம் திகதி ஞாயிறு அன்று இரவில் எமக்கு கிடைத்த ஊர்ஜிதம் செய்ய முடியாத தகவல் ஒன்றின் படி 6ம் திகதிதிங்கள்கிழமை மதியம் லிபரல் தலைவரான ட்ரூடோ ராஜினாமா செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வாரங்களாக, பிரதமமர் ட்ரூடோ அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற அழுத்தத்தை எதிர்கொண்டார் எனவும் பியர் பொய்லீவ்ரின் கன்சர்வேடிவ் கட்சியானது தேசிய கருத்துக் கணிப்புகளில் ஆதிக்கம் செலுத்துவதால் பிரதமரது AND சொந்தக் கட்சியான லிபரல் கட்சிக்குள் அவரது தலைமைக்கு குறிப்பிடத்தக்க எதிர்ப்பு எழுந்துள்ளதாகவும் எனினும் இதற்கெல்லாம் பதில் எதுவும் தெரிவிக்காமல் பிரதமர் ஜஸ்ரின் அவர்கள் தனது வழமையான கடமைகளைக் கவனித்து வருவதாகவும் கோவைகளில் கையெழுத்திடுவதாகவும் ஒட்டாவில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ட்ரூடோவின் நீண்டகால அரசியல் பங்காளியும் நிதி அமைச்சருமான கிறிஸ்டியா ப்ரீலேண்ட் என்னும் பெண்மணி கடந்த மாதம் தனது ராஜினாமாவை திடீரென அறிவித்த நாளிலிருந்து மட்டுமே அழுத்தம் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும். நிதி அமைச்சராக தொடர்ந்து பணியாற்றுவதற்கான ட்ரூடோவின் நம்பிக்கையை அவர் இழந்துவிட்டார் என்பதையும், சாத்தியமான கட்டணப் போரில் தேவைப்படும் இருப்புக்களை வைத்திருப்பதற்குப் பதிலாக அரசாங்கம் அதிக பொதுப் பணத்தை செலவழிக்க வேண்டும் என்றும் அவர் பிரதமருக்கு பரிந்துரைத்த காரணத்தால் மட்டுமே அவர்கள் இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்போதிருந்து, ட்ரூடோ அவரை ராஜினாமா செய்வதற்கான அழுத்தங்களை எதிர்கொண்டார், எனவும் ஏனெனில் எம்.பி.க்கள் பலர் முன்னர் அவரது தலைமையை எதிர்த்தவர்களுடன் இணைந்து கொண்டதனால் பிரதமருக்கு எதிரான வலுவான போராட்டம் உட்கட்சிப் போராட்டமாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளை பிரதமர் ஜஸ்ரின் அவர்களை பதவியிலிருந்து அகற்றினால் இவரது இடத்தை நிரப்புவதற்கு சில சாத்தியமான போட்டியாளர்கள் அமைதியாக தங்களை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அதில் ஃப்ரீலேண்ட், முன்னாள் பாங்க் ஆப் கனடா கவர்னர் மார்க் கார்னி, முன்னாள் பிரிட்டிஷ் கொலம்பியா பிரதமர் கிறிஸ்டி கிளார்க் மற்றும் வெளிநாட்டு விவகார அமைச்சர் மெலனி ஜோலி ஆகியோர் அடங்குவர் என்ற செய்தியும் கசிந்துள்ளதை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

மேலும் ஜஸ்ரின் ட்ரூடோ பதவி விலகும் பட்சத்தில் மேலும் சில லிபரல் கட்சி எம்பிக்கள் மற்றும் அமைச்சர்கள் தாங்களும் கட்சியின் தலைமைக்கு போட்டியிட்டால் என்ற என்ற எண்ணப்பாட்டில் உள்ளதாகவும் அவர்களில் முன்னாள் அமைச்சர் டொமினிக் லெப்ளாங்க், சமீபத்தில் நியமிக்கப்பட்ட நிதியமைச்சர், மற்றும் தொழில்துறை அமைச்சர் பிராங்கோயிஸ் - பிலிப் ஷாம்பெயின் மற்றும் போக்குவரத்து அமைச்சரும் தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடியர் ஒருவரை மணம் செய்தவருமான அனிதா ஆனந்த் ஆகியோரும் அடங்குவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# மக்களுக்கு சரியான முறையில் சேவையாற்றாத அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

## மன்னாரில் ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க



**- எஸ்.ஆர்.லெம்பேட் (04-01-2025)**

"மக்களுக்கு சரியான முறையில் சேவை வழங்காத அரச உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாம் பின் நிற்கப் போவதில்லை. எனவே அரச உத்தியோகத்தர்கள் மக்களுடன் அன்பாக நடந்து கொண்டு அவர்களுக்கு உரிய நேரத்தில் சிறப்பான முறையில் சேவையை வழங்க வேண்டும்" என ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

3ம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த நாட்டை கட்டி எழுப்புவதற்காக மக்கள் எங்களுக்கு ஒரு ஆணையை வழங்கி இருக்கிறார்கள்.

அதை சரியான முறையில் முன்னெடுத்து. மக்களின் பிரச்சினைகளை. விரைவில் தீர்க்க நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மன்னாரில் இடம்பெற்ற நில மோசடி இட மோசடி தொடர்பில் எல்லாவற்றையும் நாம் அறிந்திருக்கிறோம்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரச்சினைகள் என்று பார்க்கும் இடத்தில், கடந்த 15 வருடங்களுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்த்து விட முடியாது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு இதனை எமது அரசாங்கம் தீர்த்து வைக்கும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கு இருக்கிறார்கள்.

அதை விட நாட்டின் பிரச்சினைகளை சுலபமாக தீர்த்து வைப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பும் எமக்கு தேவை." என அவர் தெரிவித்தார்.

# மன்னார் – வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 40 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு



**- எஸ்.ஆர்.லெம்பேட் (06-01-2024)**

மன்னார் - வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 40 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப் பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு (6.1.2025) திங்கட்கிழமை காலை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.



ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு மாலை அனுவிக்க பட்டு சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து குருக்கள் மற்றும் கிராம மக்கள் சுடர் ஏற்றி மலர் துர்வி படு கொலை செய்யப்பட்ட அருட்தந்தை மற்றும் மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தும், உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்யவும், பல்வேறு மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டு வந்த மன்னார் வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ஆம் திகதி அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார்.

மேலும் அவருடன் பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். திருப்பலியின் போது அருட்தந்தையுடன் சேர்ந்து இன்னுயிர் நீத்த உறவுகளுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப் பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்ந்து உயிர் நீத்தவர்களின் 40வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இரத்ததான நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அனுமதிப்பத்திரம் இன்றி கற்களை ஏற்றி வந்த டிப்பரை மடக்கிப் பிடித்த இளங்குமரன் எம்.பி!

பு. கஜிந்தன்



யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை சீமேந்து உற்பத்தி தொழிற்சாலைக்கு சட்டவிரோதமான முறையில் கண்டகற்கலை ஏற்றிச்சென்ற பாரவூர்தியை சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வைத்து வழிமறித்த பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.



சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, அண்மைய நாட்களில் மந்துவில் பிரதேசத்தில் இருந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்ய கட்டடப்பொருள் விற்பனை செய்யும் வர்த்தகருக்கு சொந்தமான பாரவூர்தி மூலமாக சட்டவிரோதமான முறையில் கண்டகற்களை அகழ்ந்து செல்வதாக பிரதேச மக்களால் முறைப்பாடுகள், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு கிடைக்கப்பெற்றது.

அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது கடந்த 02-01-2025) அன்று இரவு 10.15 மணியளவில் நுணாவில் பகுதியில் வைத்து குறித்த வர்த்தகருக்கு சொந்தமான பாரவூர்தியை மறித்து சோதனையிட்ட போது அனுமதிப்பத்திரம் இன்றி கற்கள் எற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த பாரவூர்தி சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார்.

# கடமையில் நேர்மையாகவும் உறுதியுடனும் இருப்பவர்களுக்கு எப்போதோ அதற்குரிய வெகுமதி கிட்டும் எனப்பாராட்டிய வடக்கு ஆளுநர் வேதநாயகன் அவர்கள்



நேர்மையில் உறுதியாக இருப்பவர்களுக்கு எப்போதோ அதற்குரிய வெகுமதி - உரிய இடம் கிடைக்கும் எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், திருவாகரன் அவர்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலராக பணியாற்றிய காலம் பொற்காலம் எனப் பாராட்டினார்.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளராக இருந்த சிவகுருநாதன் திருவாகரன் அவர்களின் மணிவிழாவும் சேவைநயப்பும் நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 3ம் திகதி காலை (27.12.2024) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் அவர்கள், திருவாகரன் அவர்களைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். ஆளுநர் தனது உரையில், சி.திருவாகரன், தற்போதைய பிரதம செயலர் இ.இளங்கோவன், பொதுச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் தான் உள்ளிட்ட 4 பேரும் இலங்கை நிர்வாக சேவைக்கு ஒரே காலத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே அணியினர் என்பதை நினைவுகூர்ந்ததுடன் 1991 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தமது முதல் நியமனங்கள் எவ்வாறிருந்தன என்பதையும் குறிப்பிட்டார்.

அன்றைய கடினமான காலத்தில் எவ்வாறு பணியாற்றினோம் என்பதையும் குறிப்பிட்டதுடன், திருவாகரன் அவர்களது தந்தையாரும் நேர்மையான ஒருவர் எனவும் அவ்வாறு நேர்மையாக இருந்தமையால் பதவி உயர்வுகள் கூட அவருக்கு மறுக்கப்பட்டன என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவி என்பது மிக முக்கியமானது என்பதுடன் பரீட்சை வினாத்தாள்களின் இரகசியத்தை பேணுகின்ற இந்தப் பதவியில் திருவாகரன் மிகத் திறம்பட பணியாற்றியிருந்தார் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தவறான விடயங்களைச் செய்யுமாறு அழுத்தங்கள் திருவாகரனுக்குப் பிரயோகிக்கப்பட்டமையால் வடக்கு மாகாணத்திலிருந்து அவர் கடந்த காலங்களில் இடமாற்றம் பெற்று கொழும்புக்குச் சென்றமையை சுட்டிக்காட்டிய ஆளுநர், திருவாகரன் தனது பதவிக்காலத்தில் ஒருபோதும் இவ்வாறான அழுத்தங்களுக்கோ மற்றையவர்களின் செல்வாக்குக்கு இடம்கொடுத்த ஒருவரும் அல்ல என்றும் தெரிவித்தார். அவரை எனது நண்பன் என்று சொல்வதில் பெருமிதம் கொள்வதாகவும் கூறினார்.

திருவாகரன் முதல் நியமனம்பெற்ற மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) மக்கள் இன்றும் அவரது சேவையை மறக்காமல் பாராட்டுவதென்பது அவரது ஒட்டுமொத்த சேவைக்கும் கிடைத்த அங்கீகாரம் என்றும் ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலராகப் பதவியேற்கவுள்ள பொ.குகநாதன் ஆகியோர் பங்கேற்றனர். திருவாகரனது சேவையைப் பாராட்டி நூலும், ஒலிநாடாவும் வெளியிட்டு வைக்கப்பட்டது.



# தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டும் என்கிறது யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்

அரசியல் கைதிகளின் பிரச்சினையானது சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டும் - யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து!

கிளீன் ஸ்ரீலங்கா என்பது தனியே, சுத்தம், சுகாதாரத்தை முன்னிறுத்தி வீதிகளை தூய்மைப்படுத்தல் என்பவற்றுடன் இந்த அரசின் நோக்கங்கள் இலக்குகள் அமைந்து விடக்கூடாது. அது மக்கள் மனங்களில் இருக்கக்கூடிய ஆறாத வடுக்களை, மக்கள் மனங்களில் இருக்கக்கூடிய ரணங்களை எப்போதும் தணிப்பதாக இருக்க வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சி.சிவகஜன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்து வேட்டையின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்காவின் அரச படைகளினால் இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டு, அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு, தொடர்ந்தும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய கோரி போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் முன்னெடுத்து வரும் கையெழுத்து வேட்டைக்கு வலுச் சேர்க்கும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தமது ஆதரவை வழங்கியுள்ளது.

2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் 162ஆக இருந்த தமிழ் அரசியல் கைதிகளில், தற்போது 10 பேர் தொடர்ந்தும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். அவர்களில் எட்டு பேர் மீது இலங்கை நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இருவர் இதுவரை வழக்கு விசாரணைகள் இல்லாமல் தொடர்ந்தும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

கிளீன் ஸ்ரீலங்கா என்ற வேலைத்திட்டத்தை இந்த அரசு நாட்டில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த அரசின் கரங்களானது, ஒரு இனத்தின் கரங்களில் வலிந்து திணித்த போரின் காரணமாக ஏற்பட்ட இரத்தக்கறை படிந்து காணப்படுகின்றது. அதனை அந்த அரசு சுத்தம் செய்வதற்கு முன் வரவேண்டும் என மாணவர்களாக நாம் வேண்டி நிற்கின்றோம்.

இனப்படுகொலை போர் குற்றத்திற்கு இந்த அரசு பொறுப்புக் கூற வேண்டும். இந்த இனப்படுகொலை போருடன் தொடர்புபட்டவர்கள் தான் இந்த அரசியல் கைதிகள். அவர்களை வெறுமனே அரசியல் கைதிகள் என்று அழைப்பதற்கு பதிலாக, சர்வதேச பன்னாட்டு சமவாயங்களுக்கு அடிப்படையிலே அவர்களை நாங்கள் போர் கைதிகள் என்று தான் அழைக்க வேண்டும்.

எம்மீது வலிந்து திணிக்கப்பட்ட இந்த போர் தொடர்பாக, சர்வதேச நாடுகளுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த அரசியல் கைதிகளின் பிரச்சினை என்பது ஒரு சர்வதேச பிரச்சனையாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு இது சர்வதேச பிரச்சனையாக மாற்றப்பட வேண்டுமேயானால் சர்வதேச ஜெனிவா சமவாயங்களுக்கு உட்பட்டு போர் கைதிகள் என்ற சொல்லாடல் தான் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் மாறாக ஒரு உள்நாட்டில் நடைபெறக்கூடிய குற்றம் என்ற வகையில், அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கையாளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற ஒரு வருத்தமான செய்தியையும் இந்த நேரத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம் என்றார்.

# காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்!



8ம் திகதி புதன்கிழமை இரவு இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மீன்பிடி படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்களை 23.01.2025 வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்று உத்தரவிட்டது.


இது குறித்து மேலும் தெரியவருகையில், இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல்படையினர் யாழ்ப்பாணம் - காரைநகர், கோவளம் கலங்கரை விளக்கத்தில் நடத்திய விசேட நடவடிக்கையின் போது இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடி படகை கைப்பற்றியதுடன் 10 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக சட்டநடவடிக்கைக்காக யாழ். கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.



இதன்போது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 23.01.2025 வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற பதில் நீதிவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

# சிறீலங்காவைச் சுத்தப்படுத்த முடியுமா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

சிறீலங்காவை கிளீன் பண்ணத்தான் வேண்டும். ஆனால் அதை எங்கிருந்து தொடங்குவது? சிறிலங்காவின் கறை எது? அல்லது அசுத்தம் எது? என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அங்கிருந்துதான் சுத்தப்படுத்தலைத் தொடங்கலாம். சிறீலங்காவின் அசுத்தம் எது?

இனப்பிரச்சினைதான். இன மோதல்கள்தான் சிறீலங்காவை உலக அரங்கில் அவமானப்படுத்தின. இனப்பிரச்சினைதான் சிறிலங்காவை ஜெனிவாவில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறது. இனப்பிரச்சினைதான் தமிழ் மக்களை கூடு கலைந்த பறவைகள் ஆக்கியது. இனப்பிரச்சினைதான் சிறிலங்காவுக்குள் வெளிச் சக்திகள் தலையிடும் வாய்ப்பை வழங்கியது. இனப்பிரச்சினைதான் நாட்டைப் பொருளாதார ரீதியாக நாசமாக்கியது. கடன் வாங்கிச் சண்டை செய்தார்கள். கடனுக்கு வெடிமருந்து வாங்கி தமது சக இனத்தவர்களைக் கொன்றார்கள். காசைக் கரியாக்கினார்கள். விளைவாக நாடு அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது. எந்த நாட்டை சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்தார்களோ, அந்த நாட்டிலிருந்து இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் மட்டும் மொத்தம் மூன்று லட்சத்திற்கும் அதிகமானவர்கள் வெளியேறியிருக்கிறார்கள்.

முன்பு யுத்த காலங்களில் தமிழர்கள் வெளியேறினார்கள். காரணம் உயிர்ப் பயம். இப்பொழுது சிங்கள மக்களும் வெளியேறுகிறார்கள். இப்பொழுது வெளியேறும் அதிகமானவர்கள் படித்தவர்கள், துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்கள். பெரிய பொறுப்புகளில் இருந்தவர்கள். நடுத்தர வயதுக்காரர்கள்...ஏன் வெளியேறுகிறார்கள்? யாருக்காக நாட்டை வென்று கொடுத்தார்களோ, அவர்களே வெளியேறுகிறார்கள். என்றால் அந்த வெற்றியின் பொருள் என்ன? வென்றெடுத்த நாடு யாருக்குச் சொந்தம்?

அது இப்பொழுது பேரரசுகளுக்குச் சொந்தமாகி வருகிறது. எல்லாப் பேரரசுகளின் இழு விசைகளுக்குள்ளும் நாடு சிக்கிவிட்டது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக அது கடன் வாங்கிய நாடுகள் மற்றும் உலகப் பொது நிதி நிறுவனங்களின் பிடிக்குள்ளும் வந்து கொண்டிருக்கிறது.

அண்மையில் அரசாங்கம் நிலையான வைப்புக்களுக்கான வட்டிக்கு விதிக்கப்படும் வரியை உயர்த்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க அந்த வரியை ஐந்து விகிதமாக உயர்த்தினார். அனுர அதனை பத்து விகிதமாக உயர்த்தியிருக்கிறார். அரசாங்கம் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு கீழ்படிந்தே அவ்வாறு வரியை உயர்த்தியிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் இருபது லட்ஷத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வந்தார்கள். அதேசமயம் மூன்று லட்ஷத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

போர் காரணமாக தமிழர்கள் அப்பொழுதோ புலம்பெயரத் தொடங்கி விட்டார்கள். பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், மீண்டும் தமிழ்ப் புலம்பெயர்ச்சி அதிகரித்திருக்கிறது. இது மூன்றாவது தமிழ்ப் புலப்பெயர்ச்சி அலை. இந்த அலை முன்னைய இரண்டு புலப்பெயர்ச்சி அலைகளில் இருந்தும் துலக்கமான விதங்களில் வேறுபடுகிறது. முதலாவது புலப்பெயர்ச்சி அலையானது *1983 யூலைக்கு முந்தியது*. அதில் ஆங்கிலம் பேசும் படித்த, பெருமளவுக்கு உயர் குழாத்துத் தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்கள் சட்ட விரோதமாக புலம்பெயர்ந்தது குறைவு. இரண்டாவது அலை 1983இற்குப் பின்னரானது. அதில் லட்சக்கணக்கானவர்கள் புலம் பெயர்ந்தார்கள். அவர்களில் அதிகமானவர்கள் சட்ட விரோதமாகப் புலம் பெயர்ந்தார்கள். சட்டவிரோத வழிகளின் ஊடாகப் புகலிடந் தேடிச் சென்றவர்கள்.

இப்பொழுது நிகழும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையும் ஒப்பீட்டளவில் சட்ட ரீதியானது. ஏனென்றால் ஏற்கனவே புலம் பெயர்ந்தவர்கள் அந்தந்த நாடுகளில் செற்றில்ட் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஊரில் உள்ள தங்கள் உறவுகளுக்கு ஸ்பொன்சர் செய்யக்கூடிய அல்லது விசா வாங்கிக் கொடுக்கக்கூடிய தகைமையை அடைந்து விட்டார்கள். இது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் ஒரு பிரதான வேறுபாடு. அடுத்தது இப்பொழுது புலம்பெயரும் தமிழர்களில் அநேகர் படித்தவர்கள். நடுத்தர வயதினரும் உண்டு. இங்கு பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள், அரசு ஊழியர்கள், சமூகத்தின் துறைசார் தலைமைத்துவம் என்று வர்ணிக்கத்தக்கவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் ஒரு பகுதியினர் திரும்பி வருகிறார்கள். தாயகத்தில் தமது பதவி நிலை காரணமாக அனுபவித்த அதேயளவு மரியாதை புலம் பெயர்ந்த நாட்டிலும் கிடைக்காதபோது விரக்தியடைகிறார்கள். குறிப்பாக நடுத்தர வயது கடந்தவர்கள் புலம் பெயர்ந்த நாட்டின் நிலைமைகளோடு தங்களைச் சுதாகரிக்க முடியாது போகும்போது திரும்பி வருகிறார்கள். இதுவும் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் பிரதான வேறுபாடுகளில் ஒன்று.

அண்மையில், ஐரோப்பாவில் வசிக்கும் ஒரு பிரபல எழுத்தாளர் என்னைக் காண்பதற்கு வந்திருந்தார். அவரோடு ஓர் இளம் அரச ஊழியரும் வந்திருந்தார். அந்த அரச ஊழியர் சொன்னார், தான் புலம் பெயரப் போவதாக. ஏனென்று கேட்டேன். “ஒரு அரசு ஊழியனாக என்னால் தாக்குப் பிடிக்க முடியாதுள்ளது. ஒரு புதிய வீட்டைக் கட்டினேன். மூன்று மில்லியன்களுக்கும் மேல் கடன். அந்த கடனை அடைப்பதற்காக என்னுடைய சம்பளத்திலிருந்து பெரும் தொகுதி போகிறது. ஜீவனோபாயத்துக்காக அப்பாவும் அம்மாவும் வீட்டில் ஒரு கடை திறந்து விட்டிருக்கிறார்கள். அந்த கடையைத் திறப்பதற்கான முதலீட்டில் ஒரு பகுதியையும் புலம் பெயர்ந்த நண்பர்கள்தான் தந்தார்கள். புலம்பெயர்ந்த தமிழர்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் என்னுடைய கடன் ஒரு சிறிய தொகை. ஆனால் அரச ஊழியனாகிய எனக்கோ அது பெரிய தொகை. எனவே கடனாளியாக இருப்பதை விடவும் புலம்பெயரலாம் என்று முடிவெடுத்தேன்” என்று சொன்னார்.

அவரோடு எழுத்தாளர் சொன்னார் “அவர் சொல்வது உண்மை. ஏனென்றால் என்னுடைய கிராமத்துக்கு அண்மையில் ஒரு சா வீட்டுக்குப் போயிருந்தேன். என்னுடைய வயதில் உள்ளவர்கள் அங்கே வந்திருந்தார்கள். பெரும்பாலானவர்கள் தோற்றத்தில் கிழண்டிப் போய்க் காணப்பட்டார்கள். அவர்களுடைய வயதை விட அதிகம் முதுமையான தோற்றம். ஏனென்றால் வாழ்க்கை அந்தளவுக்குக் கஷ்டமாக இருக்கிறது; சுமையாக இருக்கிறது” என்று.

இவ்வாறு மூன்றாவது புலப்பெயர்ச்சி அலையின் கீழ் எத்தனை தமிழர்கள் புலம் பெயர்ந்து விட்டார்கள் என்பது தொடர்பாக சரியான புள்ளி விபரம் யாரிடமாவது உண்டா?

இப்படியாக போரில் வென்றவர்களும் புலம் பெயர்கிறார்கள்; தோற்றவர்களும் புலம் பெயர்கிறார்கள். இப்பொழுது வெற்றிக்கும் பொருள் இல்லை. தோல்விக்கும் பொருள் இல்லை. இந்த லட்சணத்தில் நாட்டைச் சுத்தப்படுத்துகிறேன் என்று புறப்பட்டு வேண்டுமானால், வீதிகளைச் சுத்தப்படுத்தலாம். சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தலாம். அதற்கும் வரையறைகள் உண்டு. ஏனென்றால் சுற்றுச் சூழலும் அரசியல் தான்.

ஒப்பீட்டளவில் ஓரளவுக்காவது சுத்தப்படுத்தக்கூடிய துறை அதுதான். அது தவிர ஏனைய எந்தத் துறையிலும் நாட்டைச் சுத்தப்படுத்த முடியுமா? கடினம். ஏனென்றால் ஊழல், முறைகேடு, அதிகார துஷ்பிரயோகம் போன்றன ஒரு பண்பாடாக வளர்ந்து விட்டன. எங்கிருந்து அவை பண்பாடாக மாறின? எல்லாப் பிரச்சினைகளையும் இனப்பிரச்சினைமூலம் திசை திருப்பலாம் என்ற அரசியல் சூழல்தான் காரணம். எல்லாத் தவறுகளையும் இந முரண்பாடைத் தூண்டுவதன்மூலம் கடந்து விடலாம் என்ற ஒரு அரசியல் சூழல்தான் காரணம். தமிழ்ப் பகுதிகளில் அரச திணைக்களங்களில் காணப்படும் விமர்சனத்துக்குரிய பெரும்பாலான அம்சங்கள் தொடர்பாக அதிகாரிகளைக் கேட்டால்,” அரசாங்கம் விடுவதில்லை அல்லது மேலதிகாரிகள் இனரீதியான விவகாரத்தை அணுகுவார்கள் என்றெல்லாம் சாட்டுச் சொல்லுவார்கள். “நாங்கள் எதையாவது செய்தால் அதனை இனரீதியாக வியாக்கியானப்படுத்தி எங்களைப் பதவி இறக்கி விடுவார்கள். அல்லது நமது பதவி உயர்வுகளை நிறுத்தி விடுவார்கள்” என்று கூறுவார்கள்.

இப்படியே இரண்டு இனங்கள் மத்தியிலும் காணப்படுகின்ற எல்லா முறைகேடுகளுக்கு இன முரண்பாட்டை ஒரு சாட்டாகச் சொல்லும் பண்பாடு வளர்ந்து விட்டது. ஏன் அதிகம் போவான்? ராஜபக்ச குடும்பத்தில் பசில் ஒரு புரோக்கராக, ஒரு டீல் மேக்கராக எப்படி எழுச்சி பெற்றார்? யுத்த வெற்றிதான் காரணம். யுத்தத்தில் வென்றவர்கள் நாட்டைத் தனிப்பட்ட சொத்தாக மாற்றினர்கள். நாட்டின் கருவூலத்தைத் திருடினார்கள். வெற்றி மயக்கத்தில் குருடாக இருந்த சிங்கள மக்களுக்கு அது முதலில் தெரியவில்லை. அது தெரிந்த பொழுது, நாடு மீள முடியாதபடி பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கி விட்டது.

இப்பொழுது அனுர வந்திருக்கிறார். இன முரண்பாடுகள் இல்லை என்று சொல்லுகிறார். அது தவறு. இன முரண்பாடுகள் எப்படி இல்லாமல் போயின? தமிழ்ப் பகுதிகளில் அவருடைய வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றியை வைத்து அவ்வாறு கூற முடியாது.இனமுரண்பாடு எங்கிருந்து தோன்றியது? தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக, தேசமாக ஏற்றுக்கொண்டு பல்லினத்தன்மை மிக்க ஒரு நாட்டைக் கட்டி எழுப்பத் தயாரில்லை என்பதுதான் இன முரண்பாட்டின் வேர். எனவே இன முரண்பாட்டைத் தீர்ப்பது என்பது நாட்டின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களைச் செய்வதுதான். ஆனால் அதைச் செய்வதற்கு அனுர தயார் இல்லை.

அனுரவின் இடத்தில் யார் இருந்தாலும் அதைச் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் இனப் பிரச்சினைதான் நாட்டைக் கடனாளியாக்கியது என்ற விடயத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு காரணம், ஊழலும்முறைகேடும் என்றுதான் அவர்களிற் பலர் கூறி வருகிறார்கள். சிங்களப் புத்திஜீவிகளில் பெரும் பகுதியினரும் அப்படித்தான் கூறி வருகிறார்கள். பொருளாதார நெருக்கடியின் மூல காரணத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பதும்ஒரு வகையில் இனவாதம்தான்.

ஆனால் இப்பொழுது இனப்பிரச்சினையில் கை வைத்தால், அதாவது ஒரு புதிய யாப்பை உருவாக்கும் விடயத்தில் கை வைத்தால், அது இளம் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடும் என்று ஒரு விளக்கம் கூறப்படுகிறது. எனவே பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்குத் தணித்தபின், ஜனாதிபதியின் பதவிக்காலத்தின் இறுதிக் கட்டத்தில் இனப்பிரச்சினையில் கை வைக்கலாம் என்றும் ஒரு விளக்கம் கூறப்படுகிறது. இது வண்டிலுக்குப் பின் மாட்டைக் கட்டும் வேலை. நோய்க்கு உரிய உள் மருந்தை எடுக்காமல், வலி நிவாரணிகளை மட்டும் வழங்கும் ஓர் அரசியல்.

எனவே இந்த இடத்தில் மாற்றத்தைச் செய்ய அனுரவால் முடியாது. அவருக்குக் கிடைத்த வெற்றியின் கைதி அவர். அந்த வெற்றியை மீறி அவர் சிந்திக்க முடியாது. அதனால்தான் கவர்ச்சியான சுலோகங்களை முன்வைக்கின்றார். நாட்டைச் சுத்தப்படுத்தப் போவதாகக் கூறுகிறார். ஆனால் நாட்டின் உண்மையான கறை அப்படியே இருக்கத்தக்கதாக அதன் விளைவாக வந்த கறைகளை அகற்றுவது என்பது வலி நிவாரணி அரசியல்தான். எனவே நாட்டைச் சுத்தப்படுத்துவது என்றால் இனப்பிரச்சினை என்ற கறையை அகற்ற வேண்டும். அங்கிருந்துதான் சிறீலங்காவைக் கிளீன் பண்ணத் தொடங்க வேண்டும்.



Happy Thai Pongal and Tamil Heritage Month

Dear Friends,
This January, I'm proud to join Tamil communities across Ontario in celebrating Thai Pongal and Tamil Heritage Month.

Thai Pongal is a time to give thanks for the harvest, and this year marks the 16th annual Tamil Heritage Month, honoring the Tamil community's remarkable contributions to our society in arts, education, business, and more.

Wishing you all a joyful Tamil Heritage Month and a Happy Thai Pongal to those celebrating.

இனிய தைப்பொங்கல் மற்றும் தமிழர் மரபுரிமை மாத வாழ்த்துக்கள்!

Best regards,
Andrea Hazell, MPP
Scarborough-Guildwood

Andrea Hazell



# கலாச்சாரப் படுகொலையின் ஆரம்பமே 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை !

## 51வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

(தமிழ் மக்கள் மீதான கலாச்சாரப் அழிப்பின் ஆரம்பமே 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.
51வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை-
யை 10 ஜனவரி 2025 தமிழர் தாயகம் அனு'டிப்பதையோட்டி இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது).
ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பதே எதிரிகளின் போருயுயாபமும், தந்திரமாகும். அதற்கு ஒப்பாக, ஈழத்தில் தமிழர் கலாச்சாரப் படுகொலையின் ஆரம்பம் தான் 1974 யாழ் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

சிறிமா அரசின் இனபாகுபாடு:

தமிழ் மரபையும், வரலாற்றையும் காத்து நிகழ இருந்த, தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கறையாகியுள்ளது.

சிறிலங்கா அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958 ,1977 , 1983இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. தமிழர் கலாச்சாரத்தை அழிக்க நிகழ்ந்த பண்பாட்டுப் படுகொலை தான் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையாகும்.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒன்பது பேர் இலங்கை காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டால் மரணம் அடைந்தனர்.

சிங்கள பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் மின்கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட இக்குழப்பத்தினால் நிகழ்ந்த விபத்துகள், இந்தக் குழப்பங்களினால் இந்த மரணங்களுக்குக் காரணமாயின.
உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, காவல்துறையினரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப்படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது.

மேயர் அல்பிரட் துரையப்பாவின் வஞ்சகம்:

யாழ்ப்பாணத்தில் தமிழராட்சி மாநாடு நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த சிறிமாவோ அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேயர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட சிங்கள அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.
(தொடர்ச்சி 20ம் பக்கம்)



பனிப்பொழிவு துவங்கும்போது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன.

1. **பனிப்பொழிவு துவங்கும்போது, தெருக்கள் சாலைகளில் வாகனங்களை நிறுத்துவது தடை செய்யப்படுகிறது.** அனைத்து கார்களையும் சாலையைவிட்டு நகர்த்தி வைக்கவும், இதனால் பனி வாரி அகற்றும் இயந்திரங்கள் தங்கள் பணியைச் செய்ய இயலும். விதிமீறி நிறுத்தப்பட்ட வாகனங்களை, பணியாளர் குழுக்கள் சோதித்து அபராதச் சீட்டு வழங்கிவிட்டு நிறுத்தப்பட்ட வாகனங்களைக் கட்டி இழுத்துச் சென்றுவிடுவார்கள். அபராதம் மற்றும் பிடித்து வைத்திருப்பதற்கான கட்டணங்கள் வாகனத்தின் உரிமையாளரிடம் வசூலிக்கப்படும்.
2. **பக்க வாட்டு நடைபாதைகளில் இருக்கும் பனித்துகள் மற்றும் பனிக்கட்டியை அகற்றவும்** பனிப்பொழிவுக்குப் பின்னர் அடுத்த நாள் காலையில் உங்கள் பக்கவாட்டு நடைபாதைகளில் பனியை வாரிவிடவும்.
3. ப்ராம்ப்ட்டன் ப்ளோ ட்ராக்கர் எனும் ஆன்லைன் செயலி அல்லது 311 செயலி மூலம் உங்கள் அண்டை அயலில் **பனி அகற்றும் பணியின் முன்னேற்றம் பற்றிய தடம் அறியவும்.**
4. **பனி அகற்றும் சேவையானது சாலைகளின் வகைப்படுத்தலின் அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.** அனைத்து சாலைகளிலும் 24 மணி நேரத்திற்குள்ளாக பனி அகற்றப்படும். கடுமையான பனிப்புயலின்போது 48 மணி நேரத்திற்குள்ளாக சாலைகள் சீராக்கப்படும்.
5. **பனி அகற்றுதலில் பிரச்சனை ஏதும் உள்ளதா?** அதைப் பற்றி தெரிவிக்க, பனிப்பொழிவு முடிந்தபின்னர் தயவு செய்து 24 மணி நேரம் காத்திருக்கவும்.

மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: **brampton.ca**/snow

BRAMPTON

# "இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை உறுதிபடுத்துக"

இலங்கை செய்திகள் Sri Lanka News

## இந்தியாவின் முன்னணி இடதுசாரி கட்சி வலியுறுத்தல்

**இலங்கையின் ஜனாதிபதியாக அனுர குமார திசாநாயக்க தெரிவானபோது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தது.**

**"இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஒரு இடதுசாரி வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றது ஒரு வரலாற்று நிகழ்வு" என அந்தக் கட்சி குறிப்பிட்டிருந்தது.**



**- சிவா பரமேஸ்வரன்**

இந்தியாவின் முன்னணி இடதுசாரி கட்சிகளில் ஒன்றான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இலங்கையில் தமிழர்கள் சமத்துவம் மற்றும் கண்ணியத்துடன் வாழ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தியா முழுவதும் ஆதரவாளர்கள் நிரம்பியுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24ஆவது தமிழ்நாடு மாநில மாநாடு கடந்த வார இறுதியில் (ஜனவரி 3-5) தமிழகத்தின், விழுப்புரத்தில் நடைபெற்றது.

மாநாட்டின் ஆறாவது தீர்மானம் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் அவல நிலை பற்றி பேசுகிறது மேலும் அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென இலங்கை அரசை கோருகிறது.

அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று, "இலங்கையிலுள்ள தமிழர்கள், இஸ்லாமியர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் சமத்துவதுடன் வாழவும், மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை உறுதி செய்ய வேண்டும்", என்பதாகும்.

"இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துமின்மைக்கும், நீண்ட காலமாக இன வெறி தாக்குதலுக்கும் ஆளாகி வந்த நிலையில், அது உள்நாட்டு யுத்தத்திற்கும், அமைதி இன்மைக்கும் வழி வகுத்தது. அதனால் அனைத்து பகுதி மக்களும் பாதிப்புக்கு உள்ளாகினர்".

தற்போது தமது "சக தோழரான" அனுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அனைத்து தரப்பு மக்களின் ஆதரவையும் பெற்றுள்ள நிலையில், சமத்துவம் மற்றும் அதிகாரப் பகிர்வு உறுதிப்படுத்தப்படுத்தப்பட வேண்டுமென நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தற்போது இலங்கைத் தமிழர்கள் உட்பட அனைத்து சிறுபான்மை மக்களின் ஆதரவு பெற்ற தேசிய மக்கள் சக்தி, அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளது. இச்சுமூகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி சமத்துவத்தையும் மாகாணங்களுக்கான அதிகார பரவலையும் உறுதி செய்ய வேண்டுமென இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது".

மேலும் மாகாண சபைகளுக்கு விரைவாக தேர்டலை நடத்த வேண்டும் எனவும், அவற்றை விரைவாக நடத்தி அனைத்து மாகாண சபைகளுக்கும் உரிய அதிகாரங்கள் வழங்குவதன் ஊடாக, தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசு முன்வர வேண்டும் எனவும் அந்த மாநாட்டின் தீர்மானம் கோரியுள்ளது.

இலங்கையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசும், அதன் தலைவரும் ஜனாதிபதியுமான அனுர குமார திஸநாயக சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை பெற்று, அவர்களுக்கு உரிமைகளை அளிக்கும் தீர்வுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அந்தக் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இலங்கை தமிழர்கள், இஸ்லாமியர்களின் மலையகத் தமிழர்களின் நம்பிக்கையை பெறும் வகையில் உரிய கருத்துப் பரிமாற்றங்களை நடத்தி தீர்வுகளை உருவாக்க வேண்டும். மாகாணங்களுக்கான அதிகார பரவலாக்கத்தின் போது எந்த வித கட்டுப்பாடுகளும் விதிக்காது, கல்வி, சுகாதாரம், விவசாயம், வீட்டுவசதி, நிலம், பொலிஸ் போன்ற விடயங்களிலும் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென இம் மாநாடு வலியுறுத்துகிறது".

இலங்கையிலுள்ள சிறுபான்மையினருக்கு அதிகாரப் பகிர்வு மற்றும் அவர்களுக்கான நல்வாழ்வு மற்றும் சமத்துவம் குறித்து இயற்றப்பட்ட தீர்மானத்தை மதுரை நாடாளுமன்ற உறுப்பினரும் எழுத்தாளருமான சு.வெங்கடேசன் முன்மொழிய, தமிழக சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை வழிமொழிந்தார்.

இந்திய நாடாளுமன்றத்தின் கீழவையான லோக் சபாவில் கட்சிக்கு நான்கு உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் இந்திய நாடளுமன்ற மேலவையான ராஜ்ய சபாவில் அக்கட்சிக்கு ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர். மேலும் பல மாநிலங்களில் சட்டமன்றங்களுக்கு அந்த கட்சியின் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளதோடு, கேரள மாநிலத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைமையிலான இடதுசாரி கட்சிகளின் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது.

மக்கள் ஜனநாயகம், தேச பக்தர்கள், ஜனநாயக சக்திகள் ஆகியோரின் புரட்சிகர ஒற்றுமை மூலம் சமூக மாற்றத்தை கொண்டு வருவதற்கு உறுதி பூண்டுள்ளதாக அந்த கட்சியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் தமது கட்சியின் அடித்தளம் உழைப்பாளர்கள் மற்றும் விவசாயிகளின் கூட்டணியே என அக்கட்சி தெரிவிக்கின்றது.

பணியாற்றும் உரிமை, தொழிலாளர்களை ஒன்று திரட்டி கூட்டு பேரம் பேசுதல் மற்றும் வேலை நிறுத்தம், மனித உரிமைகள் ஆகியவை அக்கட்சியின் அடிப்படை கொள்கைகள் மற்றும் அடிப்படை விழுமியங்களாக கூறப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையின் ஜனாதிபதியாக அனுர குமார திசாநாயக்க தெரிவானபோது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தது.

"இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஒரு இடதுசாரி வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றது ஒரு வரலாற்று நிகழ்வு" என அந்தக் கட்சி வாழ்த்தியது.

"சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி அனுர திஸாநாயக்க நாட்டை சமூக பொருளாதார அபிவிருத்தி, முன்னேற்றம் மற்றும் நலன்புரி பாதையில் இட்டுச் செல்வார் என நாங்கள் நம்புகிறோம். அவரது முயற்சிகள் சிறப்பாக அமைய வாழ்த்துகள்" என அக்கட்சி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

# கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே கனடாவின் பிரதமராக பதவி வகிப்பதற்கு பொறுத்தமற்ற ஒருவராவார்

## ஒட்டாவா நகரில் தேசியப் பத்திரிகையாளர்களுக்கு பதிலளிக்கையில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவிப்பு





கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே கனடாவின் பிரதமராக பதவி வகிப்பதற்கு பொறுத்தமற்ற ஒருவராவார். தற்போதைய அரசியல் நிலமையில் பல விடயங்களில் மிகுந்த கவனிப்போடு பணியாற்றி உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சனைகளுக்கு தீர்வைக் காணவேண்டிய ஒரு கட்டத்தில் எமது தேசம் உள்ளது. அவ்வாறான நிலையில் கனடாவின் அடுத்து பிரதமராக கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே தேர்ந்தெடுக்கப்பட்டால் அது நாட்டுக்கு நல்லதல்ல. எனவே தான் நான் உறுதியாக நம்புகின்றேன். எமது லிபரல் கட்சியின் தலைவராக எனக்கடுத்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள புதிய தலைவர் இந்த நாட்டின் பிரதமராக சிறந்த முறையில் பணியாற்றிக்கூடியவராக இருக்க வேண்டும். அப்போது தான் எமது கட்சி அடுத்த பொதுத் தேர்தலிலும் அரசாங்கத்தை கைப்பற்றி கனடிய தேசமும் அதன் மக்களும் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளுக்கு தீர்வைக் கண்டு லிபரல் ஆட்சி மீண்டும் தொடரவேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

இவ்வாறு ஒட்டாவா மை நகரில் 6ம் திகதி திங்கட்கிமை கனடிய தேசியப் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்தார். "நேசனல் போஸ்ட்" பத்திரிகையின் சிரேஸ்ட பத்திரிகையாளர் ஒருவர் பிரதமரிடன் கேள்வியை முன்வைக்கும் போது "தங்களுக்குப் பிறகு லிபரல் கட்சியை வழிநடத்தும் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவுள்ளவர். உங்களைப் போன்றோ அன்றி உங்களிலும் பார்க்க திறமைசாலியாக இருப்பார் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா? என்ற கேள்வியை முன்வைத்த போதே, பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது பதிலில் தொடர்ந்து தெரிவிக்கையில் "கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே கனடாவின் பிரதமராக பதவி வகிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் எமது நாடு பல சர்வதேச பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். உதாரணமாக உலகம் மாசடையும் அல்லது வெப்பமயமாகும் விடயத்திற்கு உலக நாடுகள் ஒன்றாகக் கைகோர்த்து நிற்கும் முயற்சிக்கு தான் ஆதரவு வழங்க மாட்டேன் என்று தொடர்ச்சியாக கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் போய்லீவ்ரே தெரிவித்து வருகின்றார். எனவே இவ்வாறான அவரது போக்கு உலக நாடுகள் மத்தியில் எமது கனடாவிற்கு அவப் பெயரை ஈட்டித் தந்து விடும்" என்றும் அவர் எச்சரித்தார்."

கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பலராலும் எதிர்பார்க்கப்பட்ட வண்ணம் 6ம் திகதி திங்கட்கிழமையன்று ஒட்டாவா மாநகரில் உள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் முற்றத்தில் செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தினார். அந்த செய்தி மாநாட்டில் அவர் தனது ராஜினாமா திட்டங்களை அறிவித்தார்.

அங்கு அவர் கோவிட்-19 தொற்றுநோய்களின் போது பல மாதங்களாக தேசத்தை பாதுகாக்க தானும் தனது அரசும் எவ்வாறு உழைத்தது என்பது குறித்து அவர் ஆரம்பத்தில் உரையாற்றினார், மேலும் அவரது உள்ளுணர்வு தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கூறினார், தனது சொந்த கட்சியில் உள்ள சிலரால் அந்த முயற்சி தற்போது சாத்தியமற்றதாக ஆகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கனடிய லிபரல் கட்சிக்கு ஒரு புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை லிபரல் கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் தான் தொடர்ந்து பதவிகளில் இருக்க விரும்புவதாகவும் அவர் கூறினார்.

அவர் அங்கு உரையாற்றும் போது அவரது கண்கள் சிவந்தும் கண்ணீர் சிந்துவது போன்றும் காட்சியளித்தன. துக்கம் அவரது தொண்டையை அடைப்பது போன்று அவர் முகம் காட்சியளித்தது. சொற்களை உச்சரிக்கும் பொழுது நிதானமாகவும் மெதுவாகவும் அவர் பேசினார்.

"என் நண்பர்களே, நான் ஒரு போராளி என்பதை நீங்கள் அனைவரும் அறிவது போல, என் உடலில் உள்ள ஒவ்வொரு எலும்பும் இரத்தமும் எப்போதும் என்னை எதிர்த்துப் போராடச் சொல்பவையாகவே விளங்கின, ஏனென்றால் நான் எமது கனடியர்களைப் பற்றி ஆழ்ந்த அக்கறை காட்டுகிறேன். நான் இந்த நாட்டைப் பற்றி ஆழ்ந்த அக்கறை காட்டுகிறேன்," என்று அவர் கூறினார். "கட்சித் தலைவராக ராஜினாமா செய்ய நான் விரும்புகிறேன், கட்சி தனது அடுத்த தலைவரை ஒரு வலுவான நாடு தழுவிய போட்டி செயல்முறை மூலம் தேர்ந்தெடுத்த பிறகு பிரதமர் பதவியையும் நான் விலகிச் செல்வேன்.

"இந்த நாடு அடுத்த தேர்தலில் ஒரு உண்மையான தேர்வுக்கு தகுதியானது, நான் கட்சிக்குள்ளேயே போராட வேண்டியிருந்தால், அந்தத் தேர்தலில் நான் சிறந்த ஒரு வேட்பாளராக முன்வருவதற்கு விருப்பம் இல்லாமல் இருந்தது என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது." என்றும் பிரதமர் ஜஸ்ரின் தெரிவித்தார்.

திங்கள்கிழமை அதிகாலை ஆளுனர் நாயகம் மேரி சைமனை சந்தித்ததையும், மார்ச் 24 வரை பாராளுமன்றத்திற்கு அவரது ஒப்புதலைப் பெற்றதையும் ட்ரூடோ உறுதிப்படுத்தினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் "டிசம்பர் நடுப்பகுதியில் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தனது நிதி அமைச்சரு பதவியிலிருந்து விலகிய பின்னர், நான் எனது சக லிபரல் கட்சியின் எம்.பி.க்களின் பெரும்பகுதியினரின் அழுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. கட்சியின் ஒன்டாரியோ, அட்லாண்டிக் மற்றும் கியூபெக் காகஸ்களில் உள்ள பெரும்பான்மையான எம்.பி.க்களிடமிருந்து எனக்கு தொடர்ச்சியான அழைப்புகள் வந்த வண்ணம் இருந்தன. என்றும் கவலையுடன் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, 8ம் திகதி புதன்கிழமை அவசரமாகக் கூட்டப்படவுள்ள லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ள "அங்கத்தவர்கள்" கூட்டத்திற்கு முன்னர் ட்ரூடோ தனது நோக்கங்களை அறிவிப்பார் என்றும் நம்பப்படுகின்றது.

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




Toronto District School Board

ஆங்கில திட்டத்திற்குரிய
**மழலையர் வகுப்புகளுக்கான பதிவு**
ஜனவரியில் தொடங்குகிறது




**வாருங்கள், எங்களுடன் கற்றுக்கொள்ள!**
www.tdsb.on.ca/kindergarten

NISSAN | VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

2025 **KICKS PLAY S**

LEASE FROM $298 MONTHLY WITH $1,299 DOWN.
THAT'S LIKE PAYING
$69 WEEKLY | AT | 4.99% APR FOR 39 MONTHS O.A.C.
PLUS, QUALIFYING NISSAN OWNERS MAY RECEIVE UP TO
$500 IN LOYALTY BONUS
OFFER ENDS JANUARY 2ND, 2025.

NISSAN




WINTER **READY**
EVENT



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com




# AQUA WELLNESS CENTRE LIMITED

REHABILITATION CLINIC

# INJURED?

## CALL US TODAY
## OVER 15 YEARS OF EXPERIENCE IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )




- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT


KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.



AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090

Plan Design Build



Paramount Custom Homes Ltd.
Quality comes first

Build your Dream Home With Us

RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION ✓
ARCHITECTURAL DRAWINGS ✓
OBTAINING BUILDING PERMITS ✓
REZONING ✓
LAND SEVERANCE ✓
FINANCING FOR CONSTRUCTION ✓

EXPERIENCE - 10 + YEARS



Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1

416-335-5885

TARION CERTIFIED BUILDER

REGISTERED BUILDER · TARION · TARION WARRANTY CORPORATION

# மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குரு மன்றத்தில் சிறப்பு பூசைகள்



ஸ்காபரோவில் அமைந்திருக்கும் ஆதிபராசக்தி குருமன்றத்தில் 13-1-2025 திங்கட்கிழமை காலை பருவபூசை சிறப்பாக நடைபெறும்:

14-01-2025 செவ்வாய்க்கிழமை காலை 8:30 தொடக்கம் பொங்கல்விழா சிறப்பாக பூசை நடைபெறவுள்ளது.

28-01-2025 தை அமாவாசை காலை நடைபெறும் என்பதை சக்திகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றனர்.
மகேஸ்வரபூசையும் நடைபெறும்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647





Happy Thai Pongal & Tamil Heritage Month

**Salma Zahid**
MP for Scarborough Centre

5-2155 Lawrence Avenue East
Scarborough, ON M1R 5G9
Tel: (416) 752-2358
Email: salma.zahid@parl.gc.ca
SalmaZahid15
@SalmaZahid15



**உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?**



**Legalize your basement now!**

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



**Coverall Group Inc.**
Contact: Siva 416-706-8160

# சுமந்திரனின் நடவடிக்கைகள் கட்சிக்கு இடையூறு ஏற்படுத்தியிருப்பதால், அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது

இலங்கை செய்திகள் Sri Lanka News

## அமெரிக்கா வாழ் புலம்பெயர் தமிழர்களின் அமைப்பு ஸ்ரீதரன் சிவஞானத்திற்கு எழுதியுள்ள அவசரக் கடிதத்தில் வேண்டுகோள்



"சுமந்திரனின் நடவடிக்கைகள் கட்சிக்கு கணிசமான அளவில் இடையூறு ஏற்படுத்தியிருப்பதால், அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே அவரை கட்சியிலிருந்து நீக்கும் நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுங்கள். இல்லாது போனால் உங்களைப் போன்ற சேவையாளர்களையும் தமிழரசுக் கட்சியையும் காப்பாற்ற முடியாது" என அமெரிக்கா வாழ் புலம்பெயர் தமிழர்அமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் சிவஞானம் அவர்களுக்கு எழுதியுள்ள அவசரக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

பெறுநர்: கௌரவ. ஸ்ரீதரன் எம்.பி
பாராளுமன்ற தலைவர்
இலங்கை பாராளுமன்றம்

**பொருள்: தமிழர்களுக்கான தலைமைத்துவமும் மூலோபாய நடவடிக்கையும்**

அன்புள்ள கௌரவ. ஸ்ரீதரன்,

புலம்பெயர் தமிழர்களின் செய்திகள், அமெரிக்காவின் அக்கறையுள்ள தமிழ்க் குரல்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, யாழ்ப்பாணத்தின் ஏக நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தமிழர்களின் நாடாளுமன்றத் தலைவர் என்ற முறையில் உங்களுக்கு இந்தக் கடிதத்தை அனுப்புகிறது.

இந்த இக்கட்டான தருணத்தில், கட்சியை ஒருங்கிணைத்து தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு தீர்க்கமான தலைமைத்துவத்தை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கட்சிக்குள்ளேயே தனி நபர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதையும், நமது கூட்டு முன்னேற்றத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதையும் பார்ப்பது மிகவும் கவலை அளிக்கிறது. தலைவர் என்ற வகையில், ஒழுங்கை மீட்டெடுப்பதும், தமிழ் இறையாண்மை மற்றும் நீதிக்கான கட்சியின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதும் உங்கள் பொறுப்பு.

**கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள்:**
**சீர்குலைக்கும் கூறுகளை அகற்றவும்:**

- சுமந்திரனின் நடவடிக்கைகள் கட்சிக்கு கணிசமான அளவில் இடையூறு ஏற்படுத்தியிருப்பதால், அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சுமந்திரனின் நடவடிக்கைகள் கட்சிக்கு கணிசமான அளவில் இடையூறு ஏற்படுத்தியிருப்பதால், அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே அவரை கட்சியிலிருந்து நீக்கும் நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுங்கள். இல்லாது போனால் உங்களைப் போன்ற சேவையாளர்களையும் தமிழரசுக் கட்சியையும் காப்பாற்ற முடியாது.

தனது ஈடுபாட்டை மறைக்க தனது கூட்டாளி மூலம் ITAK ஐ சட்டப் போராட்டங்களில் ஈடுபடுத்தி, கட்சியின் செயல்படும் திறனை முடக்கிவிட்டார்.

- இந்தச் செயல் அவரது பிளவுபடுத்தும் நிகழ்ச்சி நிரலை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், அவரை ஒரு பொய்யர் என்றும் அம்பலப்படுத்துகிறது, மேலும் அவரது தலைமையின் மீதான நம்பிக்கையை மேலும் சிதைக்கிறது.
- சுமந்திரன் கடந்த தேர்தலில் தோல்வியடைந்தவர், 16 வருடங்களாக அவர் பேச்சாளராகவும், தலைமைக் கொள்கை வகுப்பாளராகவும் இருந்ததால், அவரது தனிப்பட்ட அபிலாஷைகளால் முடிவுகள் உருவாக்கப்பட்டதால், வாய்ப்புகள் வீணடிக்கப்பட்டன.
- தற்போது தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட விருப்பம் காட்டி வரும் நிலையில், சுமந்திரன் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது இந்த வளர்ந்து வரும் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக உள்ளது. அவர் நிலைத்திருந்தால் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான பலவீனமான ஒற்றுமை விரைவில் காணாமல் போய்விடும்.
- சுமந்திரனை கட்சியில் இருந்து நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், அவர் பங்கேற்பதற்கு வாழ்நாள் தடை விதித்து, இனி எந்த இடையூறும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறும் நாங்கள் கடுமையாக வலியுறுத்துகிறோம்.

**தலைமைத்துவ பாத்திரங்களை வலுப்படுத்துங்கள்:**

- தமிழர்களின் அபிலாஷைகளுடன் ஒத்துப்போகும் நம்பிக்கைக்குரிய மற்றும் அர்ப்பணிப்புள்ள தலைவர்களை நியமிக்கவும்.
- சுயநல நிகழ்ச்சி நிரல்களை நிராகரித்து ஒற்றுமையை மேம்படுத்துவதன் மூலம் கட்சியின் நம்பகத்தன்மையை மீண்டும் கட்டியெழுப்பவும்.

**முக்கியமான தமிழ்ப் பிரச்சினைகளுக்கு முகவரி:**

- நில அபகரிப்பு, இராணுவத் துன்புறுத்தல் மற்றும் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை எதிர்த்துப் போராடுவதில் கவனம் செலுத்துங்கள்.
- தமிழ் பிரதேசங்களில் செயற்படும் சிங்கள மற்றும் முஸ்லிம் இராணுவ புலனாய்வு முகவர்களின் செயற்பாடுகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் எமது மக்களுக்கு மேலும் துயரத்தை ஏற்படுத்தும்.

**எதிர்காலத்திற்காக ஒன்றுபடுங்கள்:**

- மக்களின் உண்மையான அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னணி தமிழ் அரசியல் சக்தியாக கட்சியை மூலோபாய ரீதியாக நிலைநிறுத்தவும்.
- நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் இறையாண்மைக்கான ஆதரவை வலுப்படுத்த புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் சர்வதேச நட்பு நாடுகளுடன் ஒத்துழைக்கவும்.

தமிழ் மக்களின் குரல் ஒன்றுபட்டதாகவும், வலுவாகவும், அசையாததாகவும் இருப்பதை உறுதிசெய்ய உங்களின் உறுதியான தலைமையைக் கோரும் ஒரு முக்கிய தருணம் இது. புலம்பெயர் தமிழ் மக்கள் எமது மக்களின் கண்ணியம், உரிமைகள் மற்றும் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான தீர்க்கமான நடவடிக்கைகளை உற்று நோக்குகின்றனர்.

இந்த தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். தமிழர்களுக்கு நீதி மற்றும் சுதந்திரத்திற்கான அவர்களின் அபிலாஷைகளை உண்மையாக பிரதிபலிக்கும் ஒரு தலைமைத்துவம் தேவை.

உங்கள் உண்மையுள்ள,
புலம்பெயர் தமிழர்களின் செய்திகள்
அமெரிக்கா

---

# கனடாவில் தைப்பொங்கல்

*கடுங்குளிர் கொண்ட கனடா நாட்டில்*
*காலை எட்டரைக்குக் கண்விழித்தே!*
*சுடுநீரில் சாம்பு தேய்த்து நீராடி*
*சூடான கோப்பியைச் சுவைத்தோம்*
*பச்சை மாவிலை பிளாஸ்டிக் தோரணம்*
*பவிசாக வாசலில் கட்டினோம்*
*பசும்பாற் பையை பிறிஜ்ஜில் எடுத்தே!*
*பத்திரமாய்ப் பானையில் விட்டோமே!*

*மின்சார அடுப்பில் மெதுவாய் வைத்தே!*
*மகிழ்வொடு பொங்கலைத் தொடங்கினோம்*
*அன்பொடு அகத்தாளும் நானும் சேர்ந்தே!*
*அருமையாய்ப் பொங்கல் செய்யவெண்ணி*
*வன்னி அரிசியென்று வடிவாய்ப் பொதிசெய்து*
*வரிசையாய் அடுக்கி இருந்ததில்*
*பொன்போல் பெற்று வந்த பச்சரிசியை*
*பயறுடன் பானையில் இட்டோமே!*

*தேங்காய்த் துருவலும் தித்திக்கும் சர்க்கரையும்*
*தேனும் திராட்சை வற்றலும்*
*பாங்காய்ப் பசுநெய் பதமாய் விட்டே!*
*பேரீச்சம் பழமும் சேர்த்தோம்*
*கற்கண்டும் முந்திரியும் கச்சிதமாய்க் கலந்தே!*
*காற்பலம் ஏலமும் இட்டோம்*
*பற்றொடு பொங்கிய சத்தான பொங்கலை*
*பக்குவமாய் இறக்கி வைத்தோமே!*

*பட்டாசு வெடியுமின்றி பக்திப் பாட்டுமின்றி*
*பகலவனின் பார்வை அற்று*
*முட்டான குளோசெற்றில் மூச்சடங்கி நிற்கும்*
*முதல்வனுக்குப் படைத்து வைத்தோம்*
*வட்டமாய்க் கூடியே வணக்கம் செலுத்தி*
*வரிசையாய் இருந்து உண்டோம்*
*இட்டமாய் இயன்றவரை இனத்தவர்க்கும் கொடுத்தே!*
*இனிமையாய்த் திருநாளைக் களித்தோமே!*

*என்ன விலையைக் கொடுத்தே என்றாலும்*
*எம்மின வருங்காலச் சந்ததிக்கு*
*இன்பப் பொங்கல் விழாவின் இனிமையை*
*இளையோர்க்கு சொல்லி வைப்போம்*
*தொன்மைப் பரம்பரை விழுமியம் தொலைந்திடா*
*தன்மையாய்ச் சிறார்க்குச் சொல்லுவோம்*
*உன்னத நாளாம் உழவர் திருநாளை*
*உலகெலாம் அறியச் செய்வோமே!*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

# கலாச்சாரப் படுகொலையின் ஆரம்பமே 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை !

## 51வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை

(13ம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை மாநாட்டுக் குழுத்தலைவர் அன்றைய நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலக பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ். முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது.
கோலாகலம் பூண்டிருந்த யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. ஜனவரி 10 ஆம் திகதி மாநாட்டுக்கு வருகை தந்திருந்த அறிஞர்கள் கௌரவிப்பு மற்றும் விருது வழங்கல் என்பன யாழ் திறந்த வெளி அரங்கில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அன்றைய தினம் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது.
ஆனாலும் குறித்த நிகழ்வைத் தடுக்கும் வண்ணம் அப்போது மேயராக இருந்த சிறிமாவின் ஆதரவாளர் அல்பிரட் துரையப்பா யாழ் திறந்த வெளியரங்களில் நிகழ்வுகளை நடத்தவும் அனுமதி தரமறுக்க குறித்த திறந்த வெளி அரங்கம் மூடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
இதனால் குறித்த நிகழ்வுகள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின. பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்ததால் வீரசிங்கம் மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்ப, ஏனைய பொதுமக்கள் வீரசிங்க மண்டபத்திற்கு முன்னாலும், யாழ் முற்றவெளியிலும் தங்கியிருந்தனர்.

இறுதி நாள் நிகழ்வு:


1974ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், ஈழப் பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள்.

ஈழத் தமிழ் மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் "நைனா முகமது" பேசிக் கொண்டிருக்கும் போது யாழ். உதவிக்கு காவற்துறைமா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள்.
இச் சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பல தமிழ் மக்கள் காயமடைந்தனர். நிகழ்ச்சி அரங்குகள் சேதமடைந்தன. இம்மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் காவற்றுறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான 10.01.1974 அன்று கொல்லப்பட்ட மக்களின் விபரம் வருமாறு:வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 மாணவன்),பரம்சோதி சரவணபவன் (வயது 26), வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32),ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 ஆசிரியர்),புலேந்திரன் அருளப்பு (வயது 53), இராசதுரை சிவானந்தம் (வயது 21 மாணவன்),
இராஜன் தேவரட்ணம் (வயது 26),
சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 ஆயுள்வேத வைத்தியர்), சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 மாணவன்) ஆகியோர் இம் மாநாட்டில் களப்பலியாகினர்.
இந்த இறப்புகளின் பின்னர் தீவிரமாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியவாத போக்கினால், ஈழப் போராட்டம் பின்னர் தீவிரமாக வளர்ச்சியுறத் தொடங்கியது.
50வது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையை 10ஜனவரி 2025 அன்று தமிழர் தாயகம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கிறது. தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத வடுவை உருவாக்கியுள்ளது.










மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1128

## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையாஉ கோவில் தெல்லிப்பளை

---

*" திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் -உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
குாதலாற் கூப்புவர் தம் கை."*

கணபதி வழிபாடு பல்வேறு நாடுகளிலும் போற்றப்படும் சிறப்புடையது. சைனர், பௌத்தர் போன்ற பிற மதத்தினரும் பேணும் பெருமை மிக்கது. இந்தியா முழுவதிலும் இவ் வழிபாடு பழையகாலத்தில் சிறப்புற்று விளங்கியது. இந்தியாவுக்கு வடக்கே நேபாளம், தீபெத்து, சீனா ஆகிய இடங்களிலும் கணபதி வழிபாடு முன்னர் பரவியிருந்தது. சிங்கவாகனம், ஐந்துமுகம், படைதாங்கிய கைகளெட்டு, மோதகம் ஏந்திய கை, அபயகரம் என்னும் அம்சங்கள் அமைந்த ஏரம்ப கணபதி வடிவில் விநாயகரை நேபாளத்தில் இந்துக்களான கூர்க்கர்களும், பௌத்தர்களான மேவார்களும் வழிபடுதல் வழக்கம். அசோகச் சக்கரவர்த்தியின் மகள் சாருமதியே நேபாளத்தில் கணபதி வழிபாட்டை அறிமுகம் செய்தாளென அறிஞர்கள் கருதுகின்றனர். நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் இன்றும் காணப்படும் ஏரம்ப கணபதி வடிவம் இவ்வழிபாடு பெற்ற பண்டைச் சிறப்பை எடுத்தியம்புகின்றது.

தீபெத் நாடு, பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு. ஆயினும் அங்குள்ள இந்துக்களோடு பௌத்தர்களும் கணபதியை அன்போடு வழிபட்டனர். சீனாவிலே சூரியனின் அம்சமாகக் கணபதியை வழிபட்டனர். ஜப்பானிலே காங்கிடென் என்னும் பெயரில் ஒருவரையொருவர் தழுவும் இரட்டைத் தெய்வ வடிவில், முற்காலத்தில் கணபதியை வழிபட்டுள்ளனர். இந்தியப் பண்பாடு பரவியுள்ள தென்னாசிய நாடுகளில் கணபதி வழிபாடும் பரவலாகப் போற்றப்பட்டது. இந்தோனேசியா, பர்மா, வியட்நாம், போன்ற நாடுகளிலும் இவ்வழிபாடு போற்றப்பட்டுள்ளது. பொலினேசியத் தீவுக்கூட்டத்திலுள்ள மக்கள் லோனோ என்னும் பெயரில் கணபதியை வழிபட்டு வருகின்றனர். ரஷ்யாவில் கஸ்பியன் பகுதியிலுள்ள பக்கு என்னும் இடத்தில், நிலத்தின் கீழுள்ள அக்கினிக் கோயிலின் சுவரில், பளிங்கு விநாயகரின் உருவம் இருப்பதாக ஆய்வாளர் கூறியுள்ளனர். ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் மட்டுமன்றி ஆபிரிக்காவிலும், வடஅமெரிக்காவிலும் கணபதி வழிபாடு காணப்படுகின்றது.

இந்தியப் பண்பாடு பரவியுள்ள இலங்கையிலும் கணபதி வழிபாடு போற்றப்படுகின்றது. ஏனைய தெய்வங்களுக்குரியது போன்ற நிலையில் மிகப் பெரிய கோவில்கள் காணப்படாவிட்டாலும், விக்கினங்களைத் தீர்ப்பவராகக் கணபதி கருதப்படுவதால், முதல் வணக்கம் செலுத்தும் பிள்ளையாருக்கு நாடெங்கிலும் பரவலாகப் பிள்ளையார் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பிரதேசத்தில் தெல்லிப்பளையிலுள்ள வருத்தலைவிளானில் அமைந்து ள்ள விநாயகர் ஆலயம், அருளும், அற்புதங்களும் கொண்ட ஆலயமாக விளங்குகின்றது. ஐரோப்பியர் காலத்திலே சைவம் அருகி, அன்பு வற்றி நலிவுற்ற வருத்தலை விளானிலே, மீண்டும் சமய உணர்வு நிலைக்க ஓங்காரனின் அருளை அனுபூதிமான்கள் அனுதினமும் வேண்டி வழிபட்டனர். அனுபூதிமான்கள் எதிர்காலத்தில ஏற்படப்போவதை உணர்ந்தவர்கள். இவர்களது வேண்டுதலின் விளவாக வருத்தலை விளானில் விநாயகப் பெருமான் எழுந்தருளத் திருவுளங் கொண்டார். தமது வெளிப்பாட்டைச் சில சம்பவங்களின் மூலம் வெளிப்படுத்துதலை காலத்தின் நியதி என்றோ, தெய்வீக அருள் என்றோ பக்தர்கள் கூறுவது வழக்கம்.

வருத்தலை விளானிலும் இத்தகை அருளொளி வீசும் நேரம் நெருங்கியிருந்தது. அந்நாட்களிலே ஆடுகளை வருத்தலை விளானில் உள்ள வெளியில் மேய்ப்தற்காக ஓர் இடையர் வந்து செல்வது வழக்கம். அவ்வெளியிலே கம்மிக் குளம் அமைந்திருந்தது. ஆடுகளை மேய்க வந்த இடையர் வெளியில் ஆடுகளை மேய விடுவதும், அங்குள்ள கம்மிக் குளத்திலே நீர் பருகவிட்டும் ஆடுகளை மேய்த்து வந்தார்.

இவ்வாறு மந்தைகள் மேயும் பொழுது நிழல் வேண்டி அப்பிரதேசத்திலே நிழல்பரப்பிக்கொண்டிருந்த மருதவிருட்ச வேர்க்குமிழில் அமர்ந்து ஓய்வெடுப்பார். சிலவேளைகளில் ஆடுகளைத் தூர இடத்திற்கு மேயவிடுவதற்குச் சென்றால், அவ்வேளைகளில் இடையர், தனது மனம் சஞ்சலமுறுவதை அவதானித்தார். ஆடுகளும் ஒன்றோடு ஒன்று இணங்கிச் செல்லாது மோதி அமளிப்படுவதையும் கண்டுகொண்டார். மருதடியைவிட்டு வேறிடங்களுக்குச் செல்ல நேரிடும்பொழுது, வெயிலின் தாக்கத்தையும் உணர்ந்து அவதிப்பட்டார். இவ்வேளைகளில் மருதமரத்தடியை மீண்டும் நாடிவந்து, வழமையாக அமரும் வேர்க்குமிழில் அமர்ந்து, அமைதிகொள்வது இவரது வழக்கமாகக் காணப்பட்டது. ஆடுகளும் மருதமரத்துச் சூழலில் ஒன்றோடொன்று பிணங்காது அமைதியாக மேச்சலில் ஈடுபடும்.

மருதடி வேர்க்குமிழில் அமரும்பொழுது தனது மனதிலுள்ள குழப்பங்கள் அகல்வதையும், மனதில் அமைதி நிலவுவதையும், இச்சூழலில் ஆடுகள் அமைதியாக மேய்வதையும் கருத்தில் கொண்ட இடையர், மருதடி மரவேர்க்குமிழில் ஏதோவொரு சக்தி இருக்கவேண்டும் என்பதில், ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராகக் காணப்பட்டார். இக்காரணத்தினால் தினமும் மருத மரத்தை நாடிவந்து, அம்மரத்தின் வேர்க்குமிழில் அமர்வதை வழக்கமாகக் கொண்டார். இவ்வாறான எண்ணத்தோடு ஒருநாள் உறங்கியபோது அவரது கனவிலே மருதமரவேர்க்குமிழ் வெளிப்பட்டது.

*வளரும்...*

கனடிய செய்திகள் Canadian News

## Young and Well known Carnatic Musician Aathirai Sivapalan Roshan's ‘‘Gaanamirtham Fine Arts Academy” presented it Annual Program on 04-01-2025 at Richmond Hill Centre for Performing Arts.

## இளைய தலைமுறையைச் சேர்ந்தவரும் பிரபல கர்நாடக இசைக் கலைஞருமான ஆதிரை சிவபாலன் றொசான் அவர்களது "கானாமிர்தம் இசைக் கல்லூரி" வழங்கிய வருடாந்த இசை நிகழ்ச்சி

இளைய தலைமுறையைச் சேர்ந்தவரும் பிரபல கர்நாடக இசைக் கலைஞருமான ஆதிரை சிவபாலன் றொசான் அவர்களது "கானாமிர்தம் இசைக் கல்லூரி" வழங்கிய வருடாந்த இசை மற்றும் வாத்திய இசை நிகழ்ச்சி கடந்த 04-01-2025 அன்று சனிக்கிழமையன்று Richmond Hill Centre for Performing Arts கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கர்நாடக இசையும் மேற்கத்தைய இசைக் கருவிகளும் சங்கமித்து அதனாடு தெய்வீகக் கலையாம் பரதக் கலையை செவ்வனே கலைஞர்களும் நடனமாடியும் சிறியோர் முதல் வளர்ந்தோர் வரை மேடையில் தோன்றி தங்கள் அற்புதமாக படைப்புக்களை எமக்காக வழங்கிய இந்த விழாவில் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு கிடைத்த அழைப்புக்கு இணங்க நாம் அங்கு சென்று அமைதியாக சபையின் முன்வரிசையில் அமர்ந்திருந்து இசையின் முழுப் பரிமாணங்களையும் அனுபவித்தோம்.

விழாவிற்கு சிறப்பு சேர்க்கும் வகையில் கனடாவில் மேற்கத்தைய மற்றும் கர்டநாடக இசையையும் அதற்கான கருவிகளையும் அத்தோடு மேற்கத்தைய இசைக்கருவிகளிலும் நன்கு பரிட்சியமுள்ள கலைஞர் அரவிந்தன் அவர்களின் மெகா ரியுனர்ஸ் குழுவினர் பக்கவாத்திய இசை வழங்க இந்த விழா இனிமையின் உச்சத்திற்கு எம்மை அழைத்துச் சென்றது என்றால் அது மிகையாகாது.

மேற்கத்தைய இசைக் கருவிகளின் சங்கம் அங்கு இடம்பெற்றிருந்தாலும் கர்நாடக சங்கீதத்தின் அத்திவாரம் சிதைக்கப்படாமலுமல் மிகுந்த சிரத்தை எடுத்து இந்த விழாவை சிறப்புற இறுதிவரை நகர்த்திச் சென்ற ஆசிரியை ஜெயராணி சிவபாலன் (ஆசிரியை ஆதிரையின் அன்னையார்) திருமதி. ஆதிரை சிவபாலன் றொசான் மற்றும் மெகா ரியுனர்ஸ் இசைக்குழுவின் ஸ்தாபகரும் தலைவருமான அரவிந்தன் ஆகியோரின் இணைந்த பங்களிப்பு போற்றுதற்குரியதாக அமைந்திருந்தது.

இந்த கானாமிர்தம் இசைக் கல்லூரியில் தொடர்ச்சியாக இசை பயின்று வரும் அனைத்து மாணவ மாணவிகள் எதிர்காலத்தில் கல்வியிலும் இசைத்துறையிலும் மேலோங்கி வளர்ந்து விருட்சங்களாக விளங்க கனடா உதயன் ஆசிரிய பீடம் வாழ்த்துகின்றது.

**- சத்தியன்**











கனடிய செய்திகள்
Canadian News

# Only if our Province is to create more highways and adjust the traffic jams, Ontario and its economy can continue to grow.

## Ontario Premier mentioned in his letter to the Chairman of the Board of Directors, Metrolinx

# எமது மாகாணத்தில் நெடுஞ்சாலைகளை உருவாக்கி, போக்குவரத்து நெரிசல்களை சரிசெய்தால் மட்டுமே ஒன்ராறியோவும் அதன் பொருளாதாரமும் தொடர்ந்து வளர முடியும்

## மெற்றோ லிங்க் நிறுவனத்தின் ஒன்றாரியோ முதல்வரும் போக்குவரத்து அமைச்சரும் இணைந்து அனுப்பியுள்ள கடிதம்



மெட்ரோலின்க்ஸ் நிறுவனம் மற்றும் எங்கள் அரசாங்கம் நம்பகமானதும், உயர்தரமானதுமான சேவைகளை வழங்க கடுமையாக உழைத்து வருகின்றோம்.

ஒன்ராறியோ பயணிகளுக்கான இணைக்கப்பட்ட பிராந்திய போக்குவரத்து அமைப்பு முறையை முன்னைய மாகாண அரசாங்கங்கள் கட்டத் தவறியதன் விளைவுகளை நாங்கள் அறிவோம். முந்தைய அரசாங்கங்கள் எமது மக்களுக்காக முதலீடு செய்ய விரும்பவில்லை.

எனவே ஒன்றாரியோ மாகாணத்தில் நெடுஞ்சாலைகளை உருவாக்கி, போக்குவரத்து நெரிசல்களை சரிசெய்தால் மட்டுமே ஒன்ராறியோவும் அதன் பொருளாதாரமும் தொடர்ந்து வளர முடியும்.

இவ்வாறு ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களும் மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சர் பிரமீட் சிங் சக்காரியா அவர்களும் இணைந்து அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தின் சுருக்கம் கீழே தமிழில் காணப்படுகின்றது. அதன் முழுமையான ஆங்கில வாசகங்கள் இணைப்பில் காணப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மெட்ரோலின்க்ஸ் நிறுவனம் மற்றும் எங்கள் அரசாங்கம் நம்பகமானதும், உயர்தரமானதுமான சேவைகளை வழங்க கடுமையாக உழைத்து வருகின்றோம்.

ஒன்ராறியோ பயணிகளுக்கான இணைக்கப்பட்ட பிராந்திய போக்குவரத்து அமைப்பு முறையை முன்னைய மாகாண அரசாங்கங்கள் கட்டத் தவறியதன் விளைவுகளை நாங்கள் அறிவோம். முந்தைய அரசாங்கங்கள் எமது மக்களுக்காக முதலீடு செய்ய விரும்பவில்லை.

சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளை போக்குவரத்து அல்லது கட்டியெழுப்பாத காரணத்தால் தற்போது ஒன்ராறியோ பயணிகள் போக்குவரத்தில் நரிசல்களில் சிக்கியுள்ளனர், மொத்தத்தில். எங்கள் மாகாண பொருளாதாரத்திற்கு நெரிசல் செலவு சமீபத்தில் ஒவ்வொரு ஆண்டும் 56.4 பில்லியன் டாலராக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஏமுத அரசாங்கம் எதிர்வரும் 2044 ஆண்டு வரை ரொறன்ரோ பெரும்பாகம் மற்றும் ஹாமில்டன் பகுதியில் நெரிசலின் பொருளாதார செலவு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் விளைவாக 400,000க்கும் மேற்பட்ட வேலைத்திட்டங்கள் மூன்று முதல் ஐந்து மடங்கு அதிகரிக்க. எங்கள் ஒன்ராறியோ தொழிலாளர்களுக்கு சிறந்த வேலைகள் மற்றும் அதிகளவு சம்பளங்களை வழங்க அரசாங்கம் செயல்படுகிறது, இது எம்மால் சமாளிக்க முடியாத மற்றும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாத செலவு என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

ஒன்றாரியோ அரசாங்கம் என்ற வகையில் நாம், வட அமெரிக்காவில் மிகப்பெரிய போக்குவரத்து விரிவாக்கத்தை வழங்குகிறோம், 70 பில்லியன் டாலர்களை முதலீடு செய்வது, இரு வழியை விரிவுபடுத்துவது உட்பட, நாள் முழுவதும் கோ ரயில் சேவையை இடங்களுக்கு வழங்க பல திட்டங்களை அறிமுகம் செய்துள்ளோம். ஒன்ராறியோ போன்ற முக்கியமான போக்குவரத்து திட்டங்களை நாங்கள் உருவாக்குகிறோம்.

டொராண்டோவில் ஒரு சுரங்கப்பாதை, பீல் பிராந்தியத்தில் ஹேசல் மெக்காலியன் பாதை மற்றும் ஹாமில்டன் லைட் ரெயில் போக்குவரத்து திட்டம், மற்றும் ஒன்ராறியோ நார்த்லேண்ட் வழியாக, நாங்கள் ஒன்ராறியோ நார்த்லேண்டரை மீண்டும் கொண்டு வருகிறோம் பயணிகள் ரயில் சேவை, இப்போது டிம்மின்ஸ் மற்றும் கோக்ரேன் வரை எல்லா வழிகளையும் நீட்டிக்கும் திட்டங்கள் இவற்றில் அடங்கும்.

நெடுஞ்சாலை 401 இன் கீழ் ஒரு புதிய இயக்கி மற்றும் போக்குவரத்து சுரங்கப்பாதை அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்கு கூடுதலாக, ஒன்ராறியோவின் பரபரப்பான போக்குவரத்து நடைபாதையில் பயணிகள் செல்ல உதவுவதற்காக, நாம் திட்டமிட்டுள்ளோம்.

எனவே ஒன்றாரியோ மாகாணத்தில் நெடுஞ்சாலைகளை உருவாக்கி, போக்குவரத்து நெரிசல்களை சரிசெய்தால் மட்டுமே ஒன்ராறியோவும் அதன் பொருளாதாரமும் தொடர்ந்து வளர முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

Dear Mr. Wright:

------------------

Metrolinx and our government are working hard to deliver the reliable, high-quality and connected regional transit system that Ontario commuters are counting on.

We know the consequences of failing to build. Previous governments' unwillingness to invest in transit or build roads and highways has left Ontario commuters stuck in traffic, with the total cost of congestion to our provincial economy recently estimated at $56.4 billion each year.

By 2044, the economic cost of congestion in the Greater Toronto and Hamilton Area is projected to increase by three to five times, with more than 400,000 lost jobs as a result.

As our government works to deliver better jobs and bigger paycheques to Ontario workers, this is a cost we cannot accept.

Our government is acting. We are delivering on the largest transit expansion in North America, investing $70 billion, including to expand two-way, all-day GO train service to destinations across the Greater Golden Horseshoe.

We are building critical transit projects like the Ontario Line subway in Toronto, the Hazel McCallion Line in Peel Region and the Hamilton light rail transit project, and through Ontario Northland, we are bringing back the Ontario Northlander passenger train service, which will now extend all the way to Timmins and Cochrane.

This is in addition to the construction of a new driver and transit tunnel expressway under Highway 401, to help get commuters moving along Ontario's busiest transportation corridor, and the $28 billion our government is investing to build, repair and upgrade roads and highways across the province, including Highway 413 and the Bradford Bypass.

To ensure that Ontario and its economy can continue to grow, we need to explore the next generation of GO passenger train service in the Greater Golden Horseshoe – GO 2.0. This significant, longer-term expansion of GO passenger train service could be enabled by diverting freight rail from existing lines through the construction of a freight rail bypass, previously referred to as the Missing Link, adjacent to the Highway 407 corridor between the Canadian Pacific Kansas City (CPKC) main line near Trafalgar Road in Milton and the Canadian National (CN) bypass line at Bramalea. Exploring the potential of this diversion, along with upgrades to existing freight rail corridors, could enable the expansion of GO train service and provide new and more convenient transit options for millions of people across southern Ontario.

By leveraging existing freight rail infrastructure, GO 2.0 could help alleviate congestion and reduce travel times for passengers. It has the potential to unlock new GO lines, stations, and Transit-Oriented Communities, supporting the province's plan to build more homes near transit. GO 2.0 could also connect into local transit, providing greater convenience and connections for commuters across the region.

DIRECTION:

Our plan for the generational GO 2.0 project will require substantial co-operation from a variety of partners, including the federal government, which has already indicated its support.

Pursuant to authority under the above noted legislative provision, Metrolinx is hereby directed to:

1. Work in partnership with the Ministry of Transportation to initiate a process of engagement with CPKC and CN, as well as the federal government. This strategy should:
a. Reflect the criticality of CPKC and CN's agreement in principle as a dependent factor in further exploration of the proposal.
b. Reflect the importance of securing CN and CPKC freight operation capacity equal to or greater to its current capacity.
c. Build on the federal government's stated interest in developing a business case for the Missing Link and reflect its critical role in achieving the substantial benefits of GO 2.0.
d. Acknowledge the federal government's role in regulating rail safety for Class 1 freight movement in Ontario, as well as support for forward looking transit expansion in Canada's most populous region, as it explores planning for High Frequency Rail.
e. Identify and obtain any necessary environmental approvals and to fulfil the constitutional duty to consult.

2. Undertake a preliminary assessment of the requirements to plan, design and deliver GO 2.0. This assessment should include:
a. Preliminary analysis of the benefits to passenger rail operations, including increased service along the Kitchener and Milton Corridors, as compared to existing GO Expansion plans, as well as opportunities for increasing passenger service across the broader rail network.
b. Strategic assessment and comparison of this strategy with existing Kitchener and Milton Corridor work, including impacts to active discussions between Metrolinx and freight partners to advance these priorities.
c. Opportunities for new GO lines, stations, and Transit-Oriented Communities, including benefits from increased connections to local transit.
d. Identification of resource requirements, government approvals, and timelines for completion of an Initial Business Case, should government direct it to proceed.
3. Work with the Ministry of Transportation to identify a timeline to complete the above deliverables to government. GO 2.0 can be a central component of our ambitious plan to build the roads, highways and transit that will get Ontario commuters out of traffic, with the infrastructure we need to support our continued growth for decades. We look forward to working with Metrolinx to support Ontario commuters on this analysis and other critical transit projects.



Should you have any questions, please do not hesitate to contact Deputy Minister Doug Jones.

Sincerely,
Doug Ford, Premier of Ontario
Prabmeet Singh Sarkaria, Minister of Transportation
Michael Lindsay, Interim CEO & President, Metrolinx
Doug Jones, Deputy Minister, Ministry of Transportation
James Pearce, Assistant Deputy Minister, Transit Division
Melissa Djurakov, Assistant Deputy Minister, Oversight and Agency Governance Division

கனடிய செய்திகள் Canadian News

# கனடா – ஸ்காபுறோ நகரில் மீண்டும் வரலாறு படைத்த "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடக நிறுவனம் நடத்திய "பாரம்பரியம்" பல்சுவை தமிழர் விழா

கனடா - ஸ்காபுறோ நகரில் 04-01-2025 அன்று சனிக்கிழமையன்று "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடக நிறுவனம் நடத்திய "பாரம்பரியம்" பல்சுவை தமிழர் விழா மீண்டும் வரலாறு படைத்தது என்று இங்கு புகழாரம் சூட்டினால் அது மிகையல்ல!

"அனலை எக்ஸ்பிரஸ்" ஊடக நிறுவனத்தின் தலைவரும் நிறுவனருமான விமல் தவராஜா அவர்கள் தலைமையில் இயங்கிவரும் குழுவில் நண்பர் செல்வன் உட்பட பலர் அடங்கியுள்ளமையும் அவர்களின் தொடர்ச்சியாக பங்களிப்புக்கள் மூலம் தான் "அனலை எக்பிரஸ்" ஊடக நிறுவனம் இவ்வாறான சாதனைகளை தொடர்ச்சியாக படைக்க முடிகின்றது என்பதும் யதார்த்தமாகின்றது.

அன்றைய நிகழ்வில் கனடாவின் பல நகரங்களிலும் இயங்கிவரும் இசசு நடன மற்றும் வாத்திய இசை திரை இசை. போன்ற துறைகளில் மாணவ மாணவிகளுக்கு வகுப்புக்களை நடத்தும் கலைசார்ந்த நிறுவனங்களின் மாணவ மாணவிகள் மேடையில் தங்கள் அற்புதமாமன படைப்புக்களை வழங்கினார்கள்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த ஒன்றாரியோ மாகாண வீடமைப்புத் துறை இணையமைச்சரும் ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான விஜேய் தணிகாசலம் அவர்கள் விழாவிற்கு ஆதரவு வழங்கிய வர்த்தகத்துறை சார்ந்தவர்களையும் ஊடக நிறுவனங்களின் நிறுவனர்களையும் பிரதம ஆசிரியர்களையும் "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடக நிறுவனத்தின் தலைவரும் நிறுவனருமான விமல் தவராஜா அவர்கள் மற்றும் நண்பர் செல்வன் சகிதம் மேடையில் கௌரவித்தார்.

மொத்த்தில் அன்றை "பாரம்பரியம்" விழா முழு நீள தமிழர் விழாவாக இந்த மண்ணின் பெருமைகளை எடுத்து வந்தது என்பதும் மிகவும் இசைவானது.

**- சத்தியன்**
**Photo Credits: Gana Arumugam and GTA Media Ganga**





















இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யானையை கண்டு உயிர் தப்பிக்க ஆற்றில் குதித்த தந்தையும் மகனும் — நீரிழ் இழுத்து செல்லப்பட்டு காணாமல் போயுள்ள தந்தை — மட்டக்களப்பு கரடியனாறு முந்தானையாற்றில் சம்பவம்

கனகராசா சரவணன்

காட்டுபகுதியில் விறகு வெட்ட சென்ற தந்தையும் 14 வயது மகனும் யானையை கண்டு உயிரை காப்பாற்ற தப்பி ஓடி ஆற்றில் வீழ்ந்து நிலையில் தந்தையை நீரில் இழுத்துச் சென்று காணாமல் போன சம்பவம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில் மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள முந்தனையாற்று பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மயிலவெட்டுவான் ஊப்போடை வீதியைச் சோந்த 49 வயதுடைய ஞானப்பிள்ளை அரணாகரன் என்பவரே இவ்வாறு நீரில் அழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

இது பற்றி தெரியவருவதாவது, குறித்த பிரதேசத்தை செர்ந்த தந்தையும் அவரது 14 வயதுடைய மகனும் காட்டையண்டிய பகுதியில் விறகு வெட்டி வருவதற்காக சம்பவதினமான காலை 9 மணியளவில் சென்றுள்ளனர்.

இதன்போது அங்கு யானையை கண்டு அதில் இருந்து தங்களின் உயிரை காப்பாற்றுவதற்காக அங்கிருந்து தப்பி ஓடி அருகிலுள்ள முந்தனையாற்றில் குதித்துள்ளனர்.

இதனையடுத்து நீரிழ் மூழ்கிய 14 வயது சிறுவன் வெளியில் வந்த நிலையில் தந்தையார் நீரில் இருந்து வெளிவராததையிட்டு அவரை தேடிய நிலையில் அவரை ஆற்று நீர் இழுத்து சென்றுள்ளதையடுத்து அங்கிருந்து சிறுவன் வீட்டிற்கு சென்று நடந்த சம்பவத்தை தெரிவித்துள்ளதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிசார் கடற்படை உதவியுடன் உறவினர்கள் அந்த ஆற்றுப் பகுதியில் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியானாறு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசாங்கம் கட்டையால் அடித்து தடுத்தாலும் போராட்டம் செய்வோம் என யாழ்ப்பாண மீனவர்கள் சூளுரை!




புதிதாக பதவியேற்றுள்ள அரசு எங்களை தண்ணீர் கொண்டு அடித்தாலும் கட்டை கொண்டு அடித்தாலும் நாங்கள் பயப்படாமல், எமது வளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக, யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்திற்கு முன்னால் போராட்டம் செய்வோம் என யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்ஸிஸ் ரட்ணகுமார் தெரிவித்தார்.

5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தின் இறுதி காலகட்டத்தில் இந்தியன் இழுவைப் படகுகளை கட்டாயப்படுத்தி நாங்கள் ஓரளவு தொழில் செய்துகொண்டு இருந்தோம். ஆனால் புதிய அரசாங்கம் வந்த பின்னர் நிறைய இழுவைமடி படகுகள் எங்களது வளங்களை அழிக்கின்றன. ஆகையால் எமது தொழிலாளிகளின் வலைகளும் இல்லாமல் போகின்றன.

புதிதாக பதவியேற்றுள்ள கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் அவர்களுக்கு நாங்கள் இதனை புதிதாக சொல்லவேண்டிய அவசியமில்லை. கடந்த காலத்தில் நாங்கள் போராட்டத்தை நடாத்தியபோது, இந்திய இழுவைப் படகுகள் குறித்து தமது தலைவருக்கு உடனடியாக தெரியப்படுத்துவோம், நடவடிக்கை எடுப்போம் என தற்போதைய கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கடற்றொழில் அமைச்சர் புதிதாக பதவியேற்ற பின்னர் இந்த இழுவை படகுகளை நிறுத்துமாறு எமது சம்மேளனம் சார்பாக நாங்கள் பல கோரிக்கை கடிதங்களை கடற்றொழில் அமைச்சரிடம் கையளித்துள்ளோம். இருப்பினும் நெடுந்தீவு தொடக்கம் சுண்டிகுளம் வரையிலான கடற் பகுதியில் இந்தியன் இழுவை படகுகள் எமது வளங்களை அளிக்கின்றன.

இவற்றினை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதியும் கடற்தொழில் அமைச்சரும் இதற்கு ஒரு சரியான முடிவினை எடுக்காவிட்டால், யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்தொழில் செய்யும் மக்களை இணைத்து நாங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்கு முன்னால் போராட்டம் ஒன்றினை செய்வோம்.

இப்பொழுது புதிய அரசாங்கம் ஒன்று வந்திருக்கின்றது. நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றபோது தண்ணியால் அடிப்பார்கள், கட்டையால் அடிப்பார்கள் அவற்றையெல்லாம் பற்றி எங்களுக்கு பயமில்லை. எங்களது பிரச்சினை தீர வேண்டும் என்றால் நாங்கள் போராட்டம் செய்வோம். எனவே ஜனாதிபதியும் கடற்தொழில் அமைச்சரும் இதற்கு ஒரு சரியான முடிவு கூற வேண்டும் என்றார்.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குருதிக்கு தட்டுப்பாடு!

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது A+ (A Positive), A- (A Negative), O- (O Negative) ஆகிய இரத்தவகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இரத்ததானம் செய்ய விரும்புவோர் மற்றும் குருதிக் கொடையாளர்கள் பருத்தித்துறை இரத்தவங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் வழங்கி உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த அவசர இரத்ததானம் வழங்குவதன் மூலம் நோயாளர்களுக்கு சிகிச்சையை சீராக வழங்க முடியும் எனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# நியூயார்க்கில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி ஆலய நிதி அனுசரணையில், ஆனைக்கோட்டை பிரதேசத்தில் 31 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பெற்றன




ஜனவரி மாதம் 7ம் திகதி செவ்வாய்கிழமையன்று நியூயார்க்கில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி ஆலயத்தின் பீடசீடர்களின் நிதி அனுசரணையில், ஆனைக்கோட்டை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 31 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பெற்றன.

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தினால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



ஆனைக்கோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள ஆனைக்கோட்டை கரைபிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட 31 மாணவர்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திரு. நவரஞ்சனின் தலைமையில் ஆலய பிரதமகுரு முன்னிலையில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டது.

அமெரிக்கா நியூயார்க்கில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி ஆலயத்தின் பீடசீடர்களின் நிதி அனுசரணையில், வன்னிப் பட்டறை உதவிக்கரத்தின் சைதன்ய சேவை ஊடாக இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# வவுனியாவில் விவசாய நிலங்களில் கட்டிடங்கள்

## அரச அதிகாரிகள் அசமந்தம் என விவசாயிகள் குற்றச்சாட்டு

(08-01-2025)

வவுனியாவில் ஏ9 வீதியை அண்டிய பல வயல் நிலங்களில் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றன.

வவுனியா தாண்டிக்குளம் நொச்சிமோட்டை, பேயாடி கூழாங்குளம் போன்ற பகுதிகளில் வயல் நிலங்களில் மண்ணிட்டு நிரப்பி மேட்டு நிலங்களாக காட்டி அதில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக விவசாயம் செய்வதற்கான நிலங்கள் இல்லாமல் போகின்ற நிலைமை வவுனியா மாவட்டத்தில் உருவாவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டுவதுடன் சம்பந்தப்பட்ட விவசாய திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்த போதிலும் அவர்களும் சில விடயங்களில் கண்டும் காணாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டி உள்ளனர்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா ரொறன்ரொ பிராந்தியத்தில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் நகைக் கடைகளில் தொடர்ச்சியாக இடம்பெறும் கொள்ளைகளை எதிர்கொள்ள சங்கம் ஒன்றை அமைத்து செயற்பட தீர்மானம்




- ரொறன்ரோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்

கனடா ரொறன்ரொ பிராந்தியத்தில் தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் நகைக் கடைகளில் தொடர்ச்சியாக இடம்பெறும் கொள்ளைகளை எதிர்கொள்ள "தமிழ் பேசும் நகைக் கடை உரிமையாளர்கள் சங்கம்" ஒன்றை அமைத்து செயற்பட அண்மையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறியப்படுகின்றது.

கடந்த காலங்களில் பல தமிழ் பேசும் உரிமையாளர்களின் நகைக்கடைகள் குறி வைக்கப்பட்டு கொடிக்கணக்கான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதும் எனினும் காவல்துறையினர் இந்த கொள்ளை முயற்சிகளை பூரணமாக நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்திருந்தாலும். இந்த கொள்ளைகளை தடுக்கும் நடவடிக்கைகளை காவல்துறையின் எந்தப் பிரிவினரும் நடவடிக்கைகள் எடுப்பதாகத் தமக்குத் தோன்றவில்லை என்றும் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு தெரிவித்த நகைக் கடை உரிமையாளர் ஒருவர், இவ்வாறான நிலையில் எமக்கென ஒரு சங்கம் அவசியம் என்று தெரிவித்தார்.

இவ்வாறு இருக்க. கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பர்லிங்டன் நகரில் அமைந்துள்ள பேர்லிங்டன் வர்த்தகத் தொகுதியொன்றில் அமைந்திருந்த நகைக் கடையில் கடந்த 4ம் திகதி சனிக்கிழமையன்று பகல்நேர தாக்குதல் மற்றும் விலையுயர்ந்த நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து ஹால்டன் போலீசார் விசாரிக்கின்றனர் எனவும் எமது ஆசிரிய பீடத்திற்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

"முக உறைகளை அணிந்த பல சந்தேக நபர்கள் கடையை விட்டு வெளியேறுவதற்கு முன்பு நகைகளை குறிவைத்து காட்சிப் பெட்டிகளை அடித்து நொறுக்கினர்" என்று போலீசார் தெரிவித்தனர்.

எனினும் எவருக்கும் எந்தவொரு காயமும் ஏற்படவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர், எந்தவொரு கைதுகளும் செய்யப்படவில்லை மற்றும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறத எனத் தெரிவித்த பொலிசார் ரொறன்ரோவிலும் ரொறன்ரோ பெரும்பாகத்திலும் அண்மைக்காலங்களில் பகல் நேரங்களில் நகைக்கடைகளை தாக்கும் மற்றும் நொறுக்குதல் மற்றும் அள்ளிச் செல்லும் நகை கடை கொள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதைக் காண்கின்றோம் எனவும் பொலிசார்ட தெரிவித்தள்ளனர்.

கடந்த ஆண்டு, டொராண்டோவில், 2023 ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் ஒப்பிடும்போது 45 நகை கடை கொள்ளைகள் இடம்பெற்றன என்று போலீஸ் அறிக்கை தெரிவிக்கும் வேளையில். இது தற்போது 80 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் தெரியவருகின்றது.

யோர்க் பிராந்தியத்தில், 14 பயத்தை ஏற்படுத்தும் கொள்ளைகள் இடம்பெற்றன, 2024 ஆம் ஆண்டில் நகைக் கடைகள் வணிகத்திற்காக திறந்திருந்தன, 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது - 100 சதவீதம் அதிகரிப்பு காணப்படுகின்றது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்னர்.

பீல் பிராந்தியத்தில், இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட நான்கு மடங்காக அதிகரித்துள்ளது, இது 2023 இல் 10 கடை கொள்ளைகளிலிருந்து 2024 இல் 39 ஆக உள்ளது. என்பதும் பொலிசாரின் அறிக்கைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அரச பணியாளர்களின் மாற்றமூடாக மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர்!

பு. கஜிந்தன்

அரச பணியாளர்களின் மாற்றமூடாக மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் - வடக்கு மாகாண ஆளுநர்!

அரசாங்க பணியாளர்களின் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் ஊடாக மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

"கிளீன் சிறிலங்கா" திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலக கேட்போர் கூடத்தில் 8ம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலர் திருமதி. சாரதாஞ்சலி மனோகரன் கலந்துகொண்டு, "கிளீன் சிறிலங்கா" வேலைத் திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்களை வழங்கியதுடன், அரசாங்க அலுவலர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.





இதன் பின்னர் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், "கிளீன் சிறிலங்கா" வேலைத் திட்டம் கௌரவ ஜனாதிபதியால் தொடக்கி வைக்கப்பட்டது என்பதையும் இந்த அரசாங்கத்தின் அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு என்றும் குறிப்பிட்டார்.

மக்களின் சேவைகளை விரைவாகவும், தரமாகவும், அன்பாகவும் வழங்குவது அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், அந்த மாற்றத்தை அரச பணியாளர்களின் நடத்தையில் ஏற்படுத்துவதன் ஊடாக செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

மேலும், இந்த நடத்தை மாற்றங்கள் உடனடியாகச் செய்யக் கூடியவை எனக் குறிப்பிட்ட ஆளுநர் 2025ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் இந்த மாற்றங்களை ஏற்படுத்தும் ஆண்டாக மாற்றுவோம் என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சுண்ணாம்புக்கல் அகழ்வில் சட்டவிரோத செயற்பாடுகள் யாவும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்கிறார் பொ. ஐங்கரநேசன்

யாழ்ப்பாணக் குடாநாடு கடலாலும், கடல் நீரேரிகளாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். பூமி வெப்பமடைவதன் விளைவாக ஏற்பட்டுவரும் கடல்மட்ட உயர்வு குடாநாட்டைப் பெருமளவு பாதிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணாம்பு அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும், அதிகப்படுத்தும். இவற்றைக் கருத்திற்கொண்டு விவசாய நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் சுண்ணாம்புக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக்கூடிய சட்டவிரோதச் செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமாகாண ஆளுநரிடம் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை முடிவுறுத்தக்கோரி பொ.ஐங்கரநேசன் இன்று வியாழக்கிழமை (09.01.2024) மனுவொன்றைச் சமர்ப்பித்த பின்னர் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் சுண்ணாம்புக்கல் வடமேற்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் கரையோரத்தை அண்டிக் காணப்படும் ஒரு இயற்கை வளமாகும். புவிச்சரித வரலாற்றில் பல மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட மயோசின் காலத்தில் கடலின் அடித்தளப் படிவுகளாகத் தோற்றம்பெற்ற இப்பாறைகள் சீமெந்து தயாரிப்பிலும், இதர கட்டுமானங்களிலும் பிரதான மூலப் பொருளாக விளங்குகின்றது. கூடவே, சூழலியல் ரீதியாகக் கடல் நீர் நிலத்தடி நீருடன் கலப்பதைத் தடைசெய்வதிலும், நிலத்தடி நீரோட்டத்திலும் மிகவும் இன்றியமையாத பங்களிப்பையும் வழங்கி வருகிறது.

சமீப நாட்களாகச் சுண்ணாம்புக்கல் அகழ்வும் அதனை வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதும் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது. சுண்ணாம்புக்கல் அகழ்வு பயிர்ச் செய்கைக்காக இரண்டடி ஆழம் வரையில் கிளறி எடுத்தல் என்ற நிலையில் இருந்து, இன்று சீமெந்து தயாரிப்புக்காகக் கனரக வாகனங்களைக் கொண்டு அகழ்ந்தெடுத்தல் என்ற நிலைக்கு மாறியுள்ளது.




குறிப்பாக, தென்மராட்சி சரசாலையில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக அரச காணிகளிலும், தனியார் காணிகளிலும் பாரிய அளவில் சுண்ணாம்புக்கல் அகழ்வு இரவு நேரங்களில் இடம்பெற்று வருகிறது. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இயக்கப்படாதிருப்பதற்குச் சுண்ணாம்புக் கல்லைப் பெறுவதில் உள்ள இடர்பாடுகளே காரணம்.

கீரிமலையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஏற்பட்ட பிரமாண்ட குழிகள் இன்னமும் மூடப்படாத நிலையில் இனிமேலும் அகழ்வைத் தொடர்வது சூழல் ரீதியாகப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் கிளிங்கர்களை எடுத்துவந்து, சீமெந்துத் தொழிற்சாலையை மீள இயக்க முடியும் என்று யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இங்கிருந்து வேறு மாவட்டங்களுக்குச் சுண்ணாம்புக்கல்லை எடுத்துச்செல்வது மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நொறுக்கப்பட்ட சுண்ணாம்புக்கற்களை அரைத் தயாரிப்பாகவோ அல்லது முடிக்கப்பட்ட தயாரிப்புகளாகவோ கருதமுடியாது என்பதால் இதனை எடுத்துச் செல்வதற்குப் போக்குவரத்து உரிமம் அவசியம் எனப் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் யாழ். மாவட்டச் செயலருக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து சுண்ணாம்புக்கல் வெளிமாட்டங்களுக்குத் தங்கு தடையில்லாமல் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆளுநர் உடனடியாக சுண்ணக்கல் அகழ்வில் நிலவும் சட்டவிரோத செயற்பாடுகளைக் களைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

VaxFacts+ CLINIC

# ஆர்எஸ்வி – அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

கனடாவில் ஆர்எஸ்விக்கு எதிரான தடுப்பூசிகள் தற்கபாது கிடைக்கின்றன - மேலும் ஆர்.எஸ்.வி குறித்த கேள்விகளுக்கு : வாக்ஸ்பேக்ட்ஸ்+ கிளினிக்கின் மருத்துவர்கள் உங்களுக்கு பதிலளிக்கத் தயாராக உள்ளனர்.

ஆர்.எஸ்.வி என்றால் என்ன?

ரெசிபிராடோரி சின்சிடியால் வைரஸ் (ஆர்.எஸ்.வி) என்பது பொதுவான சுவாச தொற்று வைரஸாகும், இது சில பிரிவினருக்கு முக்கிய உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்தக்கூடும். உதாரணமாக, இருமல், சளி, மூச்சுத்திணறல் மற்றும் காய்ச்சலுடன் கூடிய சுவாச நோய்களைப்போல இருக்கும்.

பெருமளவு பாதிக்கப்பட்டவர்களில், ஆர்.எஸ்.வி மோசமான சுவாசப்பை தொற்றுக்களை அல்லது நிமோனியா போன்ற நோய்களை உண்டாக்கலாம், குறிப்பாக கீழ்கண்டவர்களுக்கு:

- ஆறு மாதத்திற்கு குடறந்த குழந்டதகள்
- 60 வயதிற்கும் மேற்பட்ட முதியவர்கள்
- அடிப்படை உடல்நலப் பிரச்சினைகளுடன் வாழ்பவர்கள்

ஆர்.எஸ்.வி எப்படி பரவுகிறது?

ஆர்எஸ்வி தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் கைகளை நேரடியாக தொடுவதொலும், இருமல் அல்லது தும்மலின் போது வெளியேறும் துளிகள் மூலமாகவும் பரவுகிறது. இந்த வைரஸ் மிகவும் விரைவாக பரவக்கூடிய தன்டமயுடையது, சிறு குழந்டதகள் அடிக்கடி ஒன்றுகூடும் இடங்களில் இது மிக விரைவாக பரவும்.

பச்சிளங்குழந்தைகளுக்கான ஆர்எஸ்வி தடுப்பு முரறேள் என்ன?

1. எதிர்ப்புசக்தி மூலம் தடுப்பு முறை (பெய்∴போர்டஸ்)

- பெய்∴போர்டஸ் என்பது பச்சிளங்குழந்தைகளுக்கு ஒருமுடற செலுத்தப்படும் எதிர்ப்பு மருந்தாகும்; இது ஆர்எஸ்வி வைரஸிலிருந்து 6 மாதங்கள் வரை பாதுகாப்பளிக்கிறது.
- பரிந்துரை மற்றும் வழங்கப்படுவதன் விபரம்:
  - ஆர்எஸ்வி பருவத்துக்கு முன்னதாக உள்ள 2024ல் பிறந்த பச்சிளங்குழந்தைகள்.
  - இரண்டாவது ஆர்எஸ்வி பருவத்தை அடைய இருக்கும் 24 மாத அதிக ஆபத்தில்லுள்ள பச்சிளங்குழந்தைகள்.

2. தாய்மார்களுக்குரிய ஆர்எஸ்வி தடுப்பூசி (அப்ரிஸ்கவா):

- கர்ப்பகாலத்தின் 32 முதல் 36 வாரங்களுக்குள் கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்படுகிறது.
- தாய்க்கு உருவாகும் எதிர்ப்புசக்தி குழந்தைக்கு சென்று அடைவதால், குழந்தை தனது முதல் ஆறு மாதங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

பச்சிளங்குழந்தைகளுக்கு பெய்∴போர்டஸ்ஐ பரிந்துரைக்கிகறாம், ஏனென்றால் தாயின் தடுப்பூசியுடன் ஒப்பிடுகையில், தீவிரமான ஆர்எஸ்வி தொற்றுகளுக்கு எதிராக இது சுமார் 80% சதவீதம் அதிக செயல்திறனை வழங்குவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கும், பச்சிளங்குழந்தைகளுக்கு பெய்∴போர்டஸ் பாதுகாப்பானதா?

ஆம், பெய்∴போர்டஸ் பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதை கனடாவின் சுகாதார அமைச்சகம் அங்கீகரித்துள்ளது. ஊசி போடப்பட்ட இடத்தில் லேசான வீக்கம் அல்லது வலி மற்றும் காய்ச்சல் பொதுவான பக்க விளைவுகளாகும். கடுமையான பக்க விளைவுகள் அரிதானவை.

பச்சிளங்குழந்தைகள் ஆர்எஸ்வி தடுப்பை எங்கு பெறலாம்?

பெய்∴போர்டஸ் பெரும்பாலும் பிறப்புக்குப் பின்னர் மருத்துவமனையில் அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பொது சுகாதார நிலையங்கள் வழியாக வழங்கப்படுகிறது.

ஆர்எஸ்வி தடுப்பூசி பெறுவதற்கு தகுதியுடைய முதியவர்களும், அபாயத்தில் உள்ளவர்களும் யார்?

ஒன்டாரியோ மாநிலத்தில், ஆர்எஸ்வி தடுப்பூசி கீழ்கண்ட 60 வயதுக்கும் கமற்பட்ட அதிக ஆபத்துக்குள்ளாகும் மக்கள் தொடகக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது:

- முதியோர் இல்லங்கள் மற்றும் நீண்ட கால பராமரிப்பு மையங்கள்.
- டயாலிசிஸ் சிகிச்சை பெறும் நோயாளிகள், உறுப்புப் பரிமாற்றம் அல்லது நுண்கண தானம் பெற்றவர்கள்.
- வீடற்ற நிலையில் உள்ளவர்கள்.
- முதல் நாட்சி மக்கள், இனுயிட், அல்லது மெட்டிஸ் என தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள்.

முதியவர்களுக்கான ஆர்.எஸ்வி. தடுப்பூசிகள் என்ன?

1. அரெக்ஸ்வி: முதியவர்களுக்கு ஏற்படும் கடுமையான ஆர்.எஸ்.வி நோயை தடுக்கும் வகையில் உருவாக்கப்பட்ட தடுப்பூசி.
2. அப்ரிஸ்வோ: ஆர்.எஸ்.வி தொடர்புடைய கீழ் சுவாச பாதை தொற்று நோயைத் தடுப்பதில் செயல்திறமிக்க இருவகை தடுப்பூசி.

ஆர்எஸ்வி தடுப்பூசியை மற்ற தடுப்பூசிகளுடன் கொடுக்கலாமா?

ஆம். ஆர்எஸ்வி தடுப்பூசியை காய்ச்சல் மற்றும் கோவிட்-19 போன்ற பருவ தடுப்பூசிகளுடன் ஒகர நேரத்தில் எடுப்பது பாதுகாப்பானது என்று பரிந்துரைக்கப்படுகிறது. இது சுவாச பாதை தொற்று இருப்பவர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க உதவும்.

ஆர்.எஸ்.வி தடுப்பூசிகள் முதியவர்களுக்கு பாதுகாப்பானதா?

ஆர்.எஸ்.வி தடுப்பூசிகளான அரெக்ஸ்வி மற்றும் அப்ரைஸ்வோ இரண்டும் மிகவும் பாதுகாப்பானவை. குத்திய இடத்தில் சிறிய வலி, சோர்வு மற்றும் தலைவலி ஆகியவை பொதுவான பக்க விளைவுகளாகும்.

வாக்ஸ் ∴பாக்ட்ஸ்+ கிளினிக்கில் மருத்துவருடன் தொடலபேசி சந்திப்பை எப்படி பெறுவது?

நீங்கள் ஆர்எஸ்வி தொடர்பான கேள்விகள் அல்லது சந்தேகங்களுக்கு மருத்துவருடன் இரேசிய, இலவச மற்றும் தனிப்பட்ட விளக்கம் பெற விரும்பினால், இலவச மருத்துவ சந்திப்புக்கு: www.shn.ca/VaxFacts இணையதளத்தை பார்வையிடவும்.




இலங்கையில் கண்டி கொழும்பு ஆகிய நகரங்களில் கனேடிய தரத்திற்கு நிகராக முதியோருக்கான நீண்ட கால பராமரிப்பு வசதி

**Canadian Standard Long Term Care Facility in Kandy & Colombo - Sri Lanka**

Are you living Abroad?
No one to take care of your aging parents / Family member in Sri Lanka? We are here for you...
With Canadian Senior Care Standards
Love for your loved ones....

1. Skilled Nursing care 24/7
2. Medical Services
3. Dementia/Alzheimer care
4. Luxury rooms
5. Nutritious meals
6. Physiotherapy
7. Social Activities
8. Religious Activities
9. Ayurveda Treatments

Our Newest Senior living Retreat in Sri Lanka offers quality long term care for your loved ones.
Our focus is providing exceptional services by Canadian trained and registered care professional, who truly care in an environment that promotes healing and wellness.

LET OUR FAMILY TAKE CARE OF YOURS
FACILITY STARTING MID 2025

CALL US FOR MORE INFORMATION
WHATS APP SRI LANKA: +94777872968
WHATS APP CANADA: +15875835686
EMAIL: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com

நீங்கள் வெளிநாட்டில் வசிக்கிறீர்களா?
இலங்கையில் உங்கள் வயதான பெற்றோர் / குடும்ப உறுப்பினரை கவனித்துக்கொள்ள யாரும் இல்லையா?
நாங்கள் உங்களுக்காக இலங்கையில் இருக்கிறோம் ...
கனடிய முதியோர் பராமரிப்பு தரத்திற்கு நிகராக அனைத்து வசதிகளுடன் நாம் சேவை செய்கின்றோம்
உங்கள் அன்புக்குரியவர்கள் நாமும் அன்பு காட்டுவோம்

1. அனுபவம் நிறைந்த மருத்துவ உதவியாளர்களின் 24/7
2. மருத்துவ சேவைகள்
3. மென்டியா/அல்சைமர் ஆகிய நோய்களுக்கான பராமரிப்பு
4. Luxury நிறைந்த வசதியான அறைகள்
5. ஊட்டச்சத்து உணவு
6. பிசியோதெரபி- உடற் பயிற்சி வசதிகள்
7. சமூக மற்றும் பொழுதுபோக்கும் வசதிகள்
8. உங்கள் மதம் சார்ந்த வழிபாடுகள் மற்றும் பிரார்த்தனைகள் அனைத்தும் அடங்கும்
9. அத்துடன் Ayurveda சிகிச்சைகள்

இலங்கையில் எங்கள் புதிய மூத்தவர்களின் புதிய வாழ்க்கை பின்வாங்கல் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு தரமான நீண்ட கால பராமரிப்பை வழங்குகிறது.
எங்கள் கவனம் கனேடிய பயிற்சி பெற்ற மற்றும் பதிவுசெய்யப்பட்ட பராமரிப்பு நிபுணரின் விதிவிலக்கான சேவைகளை வழங்குவதாகும்,
அவர்கள் குணப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் சூழலில் உண்மையிலேயே அக்கறை காட்டுகிறார்கள்.

எங்கள் குடும்பம் உங்கள் அன்புக்குரியவர்களை கவனித்துக் கொள்ளும் இந்த சேவை 2025 நடுப்பகுதியில் தொடங்குகிறது.

மேலும் தகவலுக்கு எங்களை அழைக்கவும்:
வாட்ஸ் ஆப் இலங்கை +94777872968
வாட்ஸ் ஆப் கனடா +15875835686
மின்னஞ்சல்: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com

# இவ்வார ராசிபலன்

**10-01-2025 வெள்ளி தொடக்கம் 16-01-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** செல்வாக்கு உயரும் வாரம். வாடும் நிலை விலகி, வீடு, நிலமும் வாங்கக்கூடிய அற்புதமான காலம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியா சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்பாட்டில் கவனம் தேவை. கூட்டுத்தொழில் லாபம் தேவை. ஆரோக்கியம் கூடும். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். கர்ம வினைகள் அகலும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர். குதூகலம் கூடும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இஷ்ட தெய்வம், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,W




**ரிஷபம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையும் வாரம். புதிய வாய்ப்புக்கள் கூடும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். வியாபார லாபம் கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசு வழியில் ஆதாயம் பெருகும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழையக்கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். நண்பர்கள் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாவங்கள் விலகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் போட்டி மறையும். குடும்பத்தில் அமைதி நிலவும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். காதலர்கள் ஒற்றுமை கூடும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். வங்கி சேமிப்பு உயரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். புது முயற்சி தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உழைப்பால் மதிப்பும், உங்களால் சிறப்பும் சேரும் காலம். மனைவியால் மதிப்பு உயரும். மன அமைதி கிட்டும். மந்தமான நிலை மாறும். அற்புதமான தருணம். பொருளாதாரம் உயரும். சிறப்புக்கள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாகர், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,O




**மிதுனம்:** கௌரவ வாய்ப்பு கிடைக்கும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். இனிப்பான செய்திகள் வரும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர். பயணம் வெற்றி தரும். உதவும் குணம் உண்டு. சாதக சூழ்நிலை உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஐஸ்வர்யம் கிடைக்கும். ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கும் உன்னதமான காலம். விரும்பியது நிறைவேறும். உற்சாகம் களை கட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். புது சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். கலைத்தொழில் திருப்பம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். தொழில் லாபம் பெருகும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். துன்பம் விலகி ஓடும். இழந்த செல்வம், இழந்த கௌரவம் திரும்பக் கிடைக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,W




**கடகம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. மனைவியால் மரியாதை உயரும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். சுபிட்ஷங்கள் பெருகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை உண்டு. பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். மாற்றங்கள் கிடைக்கும். மகத்தான காலம். நினைத்ததெல்லாம் நடக்கும் நேர்த்தியான காலம். வீண் வம்பு விலகும். வயிற்று உபாதைகள் தோன்றி மறையும். விரக்திகள் மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைக்கூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். நெருக்கடிகள் குறையும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டு. பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம்.




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,6
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**சிம்மம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பிரார்த்தனை நிறைவேறும். பிரபல்யம் ஆகும் வாய்ப்பு வரும். உடல் நலனில் அதிக அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்ப குழப்பம் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பெற்றோர் வாழ்த்து உண்டு. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணம் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். காயத்ரி மந்திரத்தால் கஷ்டங்கள் விலகும். பட்டம் பதவி தேடி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கனிவான பேச்சு அவசியம். பணிவான செயல்களால் காரியத்தால் வெற்றி காணும் காலம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் பாராட்டு கிட்டும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகுவர். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். போட்டிகள் அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K





**கன்னி:** இல்லம் வளர்ச்சி அடையும் வாரம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டே'னரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பஞ்சாயத்து மூலம் பழையக் கடன் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். செல்வாக்கு உயரும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். தாய்வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். கலகலப்புக் குறையும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். சுபிட்ஷங்கள் பெருகும். ஒரு சிலருக்கு கவுரப் பதவி தேடி வரும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். பண நடமாட்டம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 8,1,2,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**துலாம்:** சொந்தங்களால் மனநிறைவு கிட்டும் வாரம். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளி தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு வளரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். செய்த்தொழில் சிறப்படையும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். தொட்டது துலங்கி சட்டென உயரக்கூடிய சாதகமான காலம். பேச்சில் பணிவு தேவை. தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். குடும்ப மேன்மைகள் உண்டாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லையுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. நோய் நொடிகள் அகலும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். கலை ஈடுபாடுகள் அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பெத்தவங்களோட ஆசி கிட்டும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலம் கவனம் தேவை. அனுகூலமான போக்கு நிலவி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். மனைவியால் மதிப்பு உயரும். பழைய பகை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அத்தியாவசிய செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு.

(தொடர்ச்சி 30 பக்கம்)

# குடும்ப விளக்கின் 6ம் ஆண்டு நினைவுநாள்



அன்னை மடியில்: 15 - 09 - 1961

ஆண்டவன் அடியில்: 11 - 01 - 2019

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று**

ஒருவன் செய்த நன்றியை ஒருபோதும் மறக்கவேகூடாது.
ஆனால் அவன் செய்த தீமையை அந்த
நொடியிலே மறந்து விடவேண்டும்



பனி பொழியும் தேசமதில் பாங்குடனே வாழ்ந்த
திருமகனாம் குமார் என்னும் அழகனே
கடல் கடந்து நீ சென்று நாம் வாழ
வழிவகுத்தாய்
இன்றும், என்றும் உன் நினைவு அழியாது
மனங்களில் நிறைந்தாய் மாசற்ற மனிதராய்
உணர்ந்தோம்


குடும்பத்தின் ஒளிவிளக்காய்,
இன்பம், துன்பம் எது வந்தெதிர் கொண்டாலும்
வாழ்க்கையில் இரண்டும் ஒன்றென எதிர் கொண்டு
வாழ்ந்து காட்டி எங்கள் வாழ்விற்கு அடித்தளம் அமைத்து
சீரான வழி காட்டினாய்
நாம் அழுவதை நிறுத்திவிட்டோம்
புலம்புவதை நிறுத்திவிட்டோம், ஆனாலும் நினைப்பதை
மட்டும் நிறுத்த முடியவில்லை.....
எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வங்களின் ஆத்மாக்கள்
சாந்திபெற 11-01-2025 அன்று ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
அருளகம் கோவிற்குளம் வவுனியாவில் சிறார்கள்,
முதியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

திதி: 4-1-2025

## திரு. சத்தியசீலன் சத்தியகுமார் (குமார்)

(யாழ். சுருவில் ஐயனார் கோவிலடி, கனடா)





**என்றும் உன்**
**நினைவுடன்**
**வாழும்**
**குடும்பஉறவுகள்**



கனடிய செய்திகள் Canadian News

# தமது "உதயன்" 1500வது வார இதழை கடந்த 03-01-2025 அன்று வெளியிட்ட கனடா உதயன் வெளியீட்டாளர்கள்

கனடாவில் வெற்றிகரமாக பிரசுரமாகி வரும் "உதயன்" பத்திரிகையின் 1500வது வார இதழை கடந்த 03-01-2025 அன்று வெளியிட்ட கனடா உதயன் வெளியீட்டாளர்கள் இந்த பெருமைக்குரிய செய்தியை உலகெங்கும் உள்ள வாசகர்கள் - வர்த்தகப் பெருமக்கள் - அபிமானிகள் - செய்தியாளர்கள் - எழுத்தாளர்கள் - நண்பர்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்கின்றனர். கனடா உதயன் வார இதழ் 1996ம் ஆண்டு மே 3ம் திகதியன்று ஸ்காபுறோ ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் வெளியிடப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள படங்களில் காணப்படும் "உதயன்" பிரதிகள் பத்திரிகையின் 25வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் இதழாக 2021ம் ஆண்டு வெளிவந்த போது எடுக்கப்பட்டவையாகும். அதன் பிரதிகள் கனடாவின் ரொறன்ரோ மற்றும் மொன்றியால் ஆகிய நகரங்களில் உதயன் அபிமானிகள் பலரின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டன.

உதயன் 2000வது இதழ் அதிக பக்கங்களோடு வெளிவரும் நாளிற்காக நாம் அனைவரும் காத்திருப்போம்!










## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** ஆனந்தம் பெருகும். வாகன மாற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். இனிப்பான செய்திகள் வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். மாற்றங்கள் கிடைக்கும். குடும்ப பாசம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Z




**தனுசு:** ஏற்றங்கள் அதிகரிக்கும் வாரம். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். இனிப்பான செய்திகள் வரும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்புக்கள் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இனிய தகவல் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டு பயணம் ஏற்படும். மாற்று இனத்தவர் நட்பு கிட்டும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். ஏற்றமும் மாற்றமும் அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். தாய்வழி உறவில் சற்று கவனம் தேவை. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கௌரவம் உயரும். வறுமைகள் ஒழியும். தன லாபம் கூடும். தகுதிகள் உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். தங்க நகைகள் சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளிப்பதால் யோக பலன் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**மகரம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். முன்கோபம் தவிர்க்கவும். எதிரிகளையும் நண்பர்களாக்கி ஏற்றங்கள் காணக்கூடிய எதார்த்தமான காலம். லஷ்மி கடாட்ஷம் உண்டாகும். ஆடை, அணிகலன் சேரும். குதூகலமான மனநிலை காணப்படும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தாய்வழி உறவினர் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கடன் தொல்லை தீரும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. மங்களச் செய்திகள் வரும். திருப்புமுனைகளை சந்திக்கக்கூடிய காலம். திருமண வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** எடுத்த காரியம் வெற்றி பெறும். தொலைநோக்கு சிந்தனையால் விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கக் கூடிய அற்புதமான காலம். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். குதூகலம் அதிகரிக்கும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் தாமதமாகும். வாகன யோகம் உண்டு. வகையான செல்வம் சேரும் காலம். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். மாலை நேரத்தில் பெண்களுக்கு கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலை உள்ள அற்புதமான காலம். இக்கட்டான சூழ்நிலை அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை தரும். நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உற்சாகம் களை கட்டும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கஷ்ட காலம் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்ச பூதம், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் வாரம். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் இன்று நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களால் பிரச்சனை ஏற்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். மனசஞ்சலம் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். வேண்டாத விஷயங்களை தவிர்க்கவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சகோதர வழியில் ஒற்றுமை அதிகரிக்கும். விவேகமான செயல்களால் வெற்றி கிட்டும். திருமண தடைகள் விலகும். கணவன், மனைவி உறவு வலுப்படும். சிறப்போடும், பொறுப்போடும் செயல்படுவீர். திருப்பு முனைகளை சந்திக்கும் காலமாக அமையும். அயல்நாட்டுப் பிரயாணம் கூடி வரும். உறவினர் பகை மாறும். வேலைவாய்ப்பு கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். உயர்ந்த நிலை அடைவீர். பொருளாதார நிலை சீராக இருக்கும். கோபம் தவிர்த்து ஆன்மீகத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும். புதிய நிலம், வீடு வாங்க நேரிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். எதிர்ப்புக்கள் குறையும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். காதலர்கள் தம்பதியாவார்கள். செல்வாக்கு மேம்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

☑ COMMERCIAL ☑ RESIDENTIAL ☑ VACANT LAND
☑ INDUSTRIAL ☑ CONSTRUCTION

"Your Perfect Space, Seamlessly Yours
Custom Choices, Effortless Living."



**OUR SERVICE** RESIDENTIAL, COMMERCIAL

- Purchase (Builder Purchase, MLS Purchase, Private Purchase)
- Equity line of Credit • Refinance • Renewal



**NESAN** Subramaniam
416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1501 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 10, 2025

**Only, if our Province is to create more highways and adjust the traffic jams, Ontario and its economy can continue to grow**

**Ontario Premier mentioned in his letter to the Chairman of the Board of Directors, Metrolinx**

# எமது மாகாணத்தில் நெடுஞ்சாலைகளை உருவாக்கி, போக்குவரத்து நெரிசல்களை சரிசெய்தால் மட்டுமே ஒன்றாறியோவும் அதன் பொருளாதாரமும் தொடர்ந்து வளர முடியும்

### மெற்றோ லிங்க் நிறுவனத்திற்க் ஒன்றாரியோ முதல்வரும் போக்குவரத்த அமைச்சரும் இணைந்து அனுப்பியுள்ள கடிதம்





மெட்ரோலின்க்ஸ் நிறுவனம் மற்றும் எங்கள் அரசாங்கம் நம்பகமானதும், உயர்தரமானதுமான சேவைகளை வழங்க கடுமையாக உழைத்து வருகின்றோம். ஒன்றாறியோ பயணிகளுக்கான இணைக்கப்பட்ட பிராந்திய போக்குவரத்து அமைப்பு முறையை முன்னைய மாகாண அரசாங்கங்கள் கட்டத் தவறியதன் விளைவுகளை நாங்கள் அறிவோம். முந்தைய அரசாங்கங்கள் எமது மக்களுக்காக முதலீடு செய்ய விரும்பவில்லை. எனவே ஒன்றாரியோ மாகாணத்தில் நெடுஞ்சாலைகளை உருவாக்கி, போக்குவரத்து நெரிசல்களை சரிசெய்தால் மட்டுமே ஒன்றாறியோவும் அதன் பொருளாதாரமும் தொடர்ந்து வளர முடியும் இவ்வாறு ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களும் மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சர் பிரமீட் சிங் சக்காரியா அவர்களும் இணைந்து அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தொடர்ச்சி 22பக்கம்)

## எமது மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அழைக்கின்றார். தனது விழாக் குழுவினரோடு இணைந்து...




## சுண்ணாம்புக்கல் அகழ்வில் சட்டவிரோத செயற்பாடுகள் யாவும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்கிறார் பொ. ஐங்கரநேசன்



யாழ்ப்பாணக் குடாநாடு கடலாலும், கடல் நீரேரிகளாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பம். பூமி வெப்பமடைவதன் விளைவாக ஏற்பட்டுவரும் கடல்மட்ட உயர்வு குடாநாட்டைப் பெருமளவு பாதிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்டுப்பாடற்ற சட்டவிரோத சுண்ணாம்பு அகழ்வு காலநிலை மாற்றத்தால் ஏற்படவுள்ள பாதகங்களை மேலும் விரைவுபடுத்தும், அதிகப்படுத்தும். இவற்றைக் கருத்திற்கொண்டு விவசாய நடவடிக்கையைப் பாதிக்காத வகையில் சுண்ணாம்புக்கல் அகழ்வை நெறிப்படுத்துவதோடு, இதில் நிலவக்கூடிய சட்டவிரோதச் செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.
(தொடர்ச்சி 25ம் பக்கம்)

## கர்நாடக இசைக் கலைஞர் ஆதிரை சிவபாலன் றொசான் அவர்களது "கானாமிர்தம் இசைக் கல்லூரி வழங்கிய வருடாந்த இசை மற்றும் வாத்திய இசை விழா





இளைய தலைமுறையைச் சேர்ந்தவரும் பிரபல கர்நாடக இசைக் கலைஞருமான ஆதிரை சிவபாலன் றொசான் அவர்களது "கானாமிர்தம் இசைக் கல்லூரி வழங்கிய வருடாந்த இசை மற்றும் வாத்திய இசை நிகழ்ச்சி கடந்த 04-01-2025 அன்று சனிக்கிழமையன்று **Richmond Hill Centre for Performing Arts** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கர்நாடக இசையும் மேற்கத்தைய இசைக் கருவிகளும் சங்கமித்து அதனாடு தெய்வீகக் கலையாம் பரதக் கலையை செவ்வனே கலைஞர்களும் நடனமாடியும் சிறியோர் முதல் வளர்ந்தோர் வரை மேடையில் தோன்றி தங்கள் அற்புதமாக படைப்புக்களை எமக்காக வழங்கிய இந்த விழாவில் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு கிடைத்த அழைப்புக்கு இணங்க நாம் அங்கு சென்று அமைதியாக சபையின் முன்வரிசையில் அமர்ந்திருந்து இசையின் முழுப் பரிமாணங்களையும் அனுபவித்தோம்.
(தொடர்ச்சி 21ம் பக்கம்)